# அன்னை தெரசா பதில்



"புறக்கணிக்கப்பட்டவர்கள், ஏழைகள், நோயாளிகள் என்று எல்லோரையும் அன்புடன் அரவணைத்து வருகிறீர்கள். இப்படிச் செய்வதால் உங்களால் உலகில் வறுமைப் பிரச்சினையைத் தீர்த்து விட முடியுமா?" என்று அன்னை தெரசாவிடம், அமெரிக்க அதிகாரி கேட்டார்.

அதற்கு தெரசா அமைதியாக, "நண்பரே! கடவுள் என்னை இவ்வுலகில் அழைத்தது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அல்ல. அதற்கு மாறாக எந்தச் செயலை என்னால் செய்ய முடியுமோ அதை உண்மையாகச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான்" என்று பதிலளித்தார்.

– மெர்வின், சென்னை.

# நீல 'டைரி'

'புளூ டைரி' என்றால் என்னவென்று தெரியுமா? எந்த விதமான ஒளிவு மறைவும் இல்லாமல், நடந்ததை நடந்தபடியே எழுதப்பட்ட நாட்குறிப்பிற்கு ஆங்கிலத்தில் இப்படி பெயர். லெனின் நாட்குறிப்பு 'புளூ டைரி' என்றே அழைக்கப்படுகிறது.

– கே.கவிதா, நெல்வாய்.



# தூண்டில் மீன்கள்





## இந்துமதி

## 1

ஜன்னல் கம்பியைப் பற்றியவாறு மொட்டைமாடியில் நின்றுகொண்டிருந்தாள் ராஜேஸ்வரி. தெரு முழுவதும்

தெரிந்தது.

தார் போட்டு மூடப்படாத செம்மண் தெரு. அதில் 'ஸ்டம்ப்' நட்டு, சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடிக்கொண்டு இருந்தார்கள். முட்டுச் சந்து என்பதால் விளையாடுவது அவர்களுக்குச் சுலபமாக இருந்தது. அநாவசியமான போக்குவரத்து இடைஞ்சல் எதுவுமில்லை. வரிசையாக இரு பக்கங்களிலும் எண்ணி பத்தே வீடுகள். வெறும் சைக்கிளும், அதிகபட்சமாய் ஸ்கூட்டரும் மட்டுமே வாகன வசதியாகக்கொண்ட மத்தியதர வர்க்கங்கள் வசிக்கிற சின்னச் சின்ன வீடுகள்.

பெட்டி- பெட்டியாக அறைகள், மாடி கட்டி வீடுகள் வாடகைக்கும் விட்டிருந்தனர். நல்ல வேளையாக இவள் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரர், மாடியில் தனியாக இன்னொரு வீடு எழுப்பவில்லை. ஒரே ஒரு அறை மட்டுமே கட்டி இருந்தார்.

அதை யாராவது ஒரு தனிக்கட்டைக்கு வாடகைக்கு விடப்போவதாகச் சொன்னதும், இவர்களே எடுத்துக்கொண்டார்கள். அந்த அறையையும் சேர்த்து ஐந்தாயிரத்து ஐநூறு ரூபாய் வாடகை. கொஞ்சம் அதிகமாகத் தோன்றியது இவளுக்கு. எதற்காக அந்தத் தனியறை என்றும்பட்டது!

அதுபற்றி அவள் சொன்னபோது ராஜாராமன், "இருக்கட்டும் ராஜி... யாராவது விருந்தாளிகள் வந்தால் படுக்க சவுகர்யமாக இருக்கும். கீழே நமக்கு ஒரே ஒரு பெட்ரூம், சமையலறை, வரவேற்பறை என்ற பேருக்கு இந்த வராந்தாவும்தானே இருக்கு. அதனால் அந்த மாடி அறையும் இருந்தால் வசதியாகத்தான் இருக்கும்..."

"நமக்கு எந்த உறவினர்கள் இருக்காங்க... வர்றதுக்கு?"

"உங்க மாமாதான் அடிக்கடி கோர்ட்டு, கேசுன்னு தஞ்சாவூர்ல இருந்து ஓடி வர்றாரில்ல? அவரு படுத்துக்கட்டுமே..."

"இத்தனை நாளா அவரு இந்த வராந்தாவுலதானே படுத்துக்கிட்டாரு. இப்ப மட்டும் எதுக்கு அவருக்குன்னு தனி அறை...?"

"விடு ராஜி! வாடகையில ஐநூறு ரூபாய்தானே அதிகம் தரப்போறோம். அதுக்கு இத்தனை வசதியா– தனியாப் படியேறிப்



போற மாதிரி ஒரு அறை எங்கே கிடைக்கும்? அவனவன் இந்த மாதிரி ஒரு தனி அறைக்கு அலையறான். நமக்கு அதிர்ஷ்டம் தேடாமலே கிடைச்சிருக்கு... இருக்கட்டும்."

அந்த அறைக்கும் சேர்த்து வாடகை கொடுக்க ஆரம்பித்து, நான்கு மாதங்களாகின்றன. அதற்குள் கொஞ்சம் கொஞ்சமாக அந்த அறையை அழகுபடுத்த ஆரம்பித்தான் ராஜாராமன். மாதம் ஒரு சாமானாக வாங்கிப் போட்டான். கட்டில், மெத்தை சின்னதாய் பீரோ, டிரஸ்ஸிங் டேபிள் என சேர்ந்தது.

இவள் போய்ப் பார்த்துவிட்டு சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"ஏங்க... நம்ம 'பெட்ரூம்' கூட இத்தனை அழகாயில்லை! இதை ஏன் இப்படி அழகுபடுத்தறீங்க? என்னவோ ஓட்டல் 'ரூம்' மாதிரி திரைச்சிலை எல்லாம் போட்டு வச்சிருக்கீங்க! எங்க மாமா வந்து தங்கறதுக்கா இத்தனை...?"

அப்போது அவன் பதில் சொல்லவில்லை. மென்மையாய் சிரித்துக்கொண்டே போய்விட்டான்.

ஆனால், அடுத்த முறை மாமா வந்தபோது, அந்தஅறையில் அவரைத் தங்க வைக்கவில்லை.

"ஏங்க, மாடி அறையோட சாவி தர்றீங்களா? மாமா வந்திருக்காரு... படுக்கச் சொல்றேன்..."

"வேணாம் ராஜி, அவரை வழக்கப்படி வாசல்லயே படுக்கச் சொல்லு..."

"என்னங்க இது... அவருக்குன்னு அறை எடுத்..."

"உஷ்... சொன்னபடி செய் ராஜி. சும்மா தொண தொணக்காதே..."

அன்று இவள் பேசாமல் இருந்துவிட்டாள்.

அதன் அர்த்தம் என்ன என்று யோசிக்கவில்லை. ஆனால், இன்று அதற்கெல்லாம் அர்த்தம் புரிந்துவிட்டது.

'செஸ்' விளையாட்டில் காய்களை நகர்த்துகிற சாமர்த்தியத்தில் வேலை செய்திருக்கிறான் அவன். எதற்காக என்பது புரியாத அளவில் யோசித்து, நிதானமாக நகர்த்தி இவளை முட்டாளாக்கி

இருக்கிறான்.

அவனுடைய ஆட்டத்தில் இவள்–

"அவுட்! கிளீன் போல்டு...!"

தெருவில் இருந்து வந்த பெரிதான கத்தலில், இவளது கவனம் சட்டென்று கிரிக்கெட் விளையாடிக்கொண்டு இருந்த பையன்கள் மீது திரும்பியது. எதிர்வீட்டுப் பையன் நாராயணன் மட்டையைத் தூக்கிக்கொண்டு தலையைத் தொங்கப்போட்டவாறு நகர்வது தெரிந்தது. 'ஸ்டம்பு'களில் இரண்டு எகிறிப் போய் அரையடி தள்ளி விழுந்து கிடந்தன.

'கிளீன் போல்டு!'

'அவுட்' ஆனது நாராயணன் மட்டுமில்லை, தானும்தான் என்று தோன்றியது... இவளுக்கு.

அந்தச் சிறுவனுக்கு வீசப்பட்டது போன்று தன் முன்னால் நின்று பந்து வீசித் தன்னை ராஜாராமன் 'அவுட்' செய்திருந்தால் கூடத் தேவலாம். ஆனால், அவன் மிக மிகக் கேவலமாக– ரகசியமாக– பின் முதுகில் கத்தியால் குத்தின மாதிரி, மாடி அறையை அவளுக்காக ஏற்பாடு செய்து... அலங்கரித்து...

அந்த அறைக்கு அவளை அழைத்து வர அவன் கோயமுத்தூர் கிளம்பிப் போயிருக்கிறான். ராத்திரி ஒன்பது மணி ரெயிலில் அவர்கள் வருவார்கள். ஒன்பதரைக்கு வீட்டில்– அந்த அறையில் இருப்பார்கள்...

இவளது அடிவயிற்றில் மீண்டும் நெருப்பு பற்றிக்கொண்டது. அக்கினிக் குண்டமாகத் தகித்தது. அதன் சுவாலை, நெஞ்சைச் சுட்டது. நினைவுகளில் நெடியடிக்கத் தொடங்கியது. பத்து நாட்களுக்கு முன் அவனது 'பேண்ட் பாக்கெட்'டில் இருந்து அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்தது ஞாபகத்திற்கு வந்தது.

ஏதாவது முக்கியமான ஆபீஸ் கடிதமாக இருக்கும் என்று பிரித்தவளுக்கு முதல் வரியே அதிர்ச்சியாக இறங்கியது. ஆங்கிலத்தில் ஆரம்பித்து தமிழில் தொடர்ந்தது அந்தக் கடிதம்.



'Raja my love,

எப்படி இருக்கிறீர்கள்? பக்கத்தில் இருந்து கவனிக்க வேண்டியவள் எங்கோ... கோயம்புத்தூரில் இருந்து விசாரிக்க வேண்டியதாய் இருக்கிறது பார்த்தீர்களா...? எப்போது என்னை உங்களிடம் அழைத்துக்கொள்ளப் போகிறீர்கள்?

ராஜா... நீங்கள் இல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை. உங்களைப் பார்க்காமல், உங்களிடம் பேசாமல் தவித்துப் போகிறேன். உலகமே வெறுமையான மாதிரி உணர்கிறேன். தயவு செய்து என்னை இந்த வெறுமை உணர்வில் இருந்து விடுவியுங்கள். என்னை அங்கே அழைத்துப் போங்கள். அல்லது நீங்கள் கோயம்புத்தூருக்கு வேலையை மாற்றிக்கொண்டு வந்துவிடுங்கள்.

இப்படி எத்தனை காலம் தனித் தனியாக பிரிந்திருப்பது ராஜா? நீங்கள் எப்போது வருவீர்கள் என்று காத்திருப்பது ஒரு பெரிய இம்சை. கொடுமையான விஷயம். 'உனக்கு மட்டும்தானா...? எனக்கு இல்லையா...? உன்னைப் பார்க்க எப்போது கோயம்புத்தூர் போவோம் என்று காத்துக்கொண்டு இருக்கவில்லையா?' என்று பதிலுக்குக் கேட்பீர்கள். இரண்டு பேருக்குமே இந்தக் காத்திருத்தல் அவசியமில்லை ராஜா. கூடிய சீக்கிரம் நாம் பதிவுத் திருமணம் செய்துகொண்டு, ஒரு இடத்தில் குடியேறலாம் என்றால் ஏதாவது காரணம் சொல்லி தவிர்க்கிறீர்கள்.

இனி நான் தாங்கமாட்டேன். நீங்களாக வந்து அழைத்துக்கொண்டு போகிறீர்களா அல்லது நானே கிளம்பி வரட்டுமா...? எனக்குத் தேவை ஏதாவதொரு அழுத்தமான பதில்தானே தவிர வேறில்லை.

அதனால் உடனடியாகப் பதில் போடுங்கள் அல்லது போனில் பேசுங்கள். இல்லாவிட்டால் நிச்சயம் பெட்டி, படுக்கையுடன் கிளம்பி வந்து– உங்கள் ஆபீஸ் வாசலில் நிற்பேன்.

உடனே, உடனே, உடனே பதில் தேவை.

இப்படிக்கு,<br>
உங்கள்...<br>
கிரிஜா'

கடிதத்தை இரண்டு, மூன்று முறை படித்தாள். படிக்கப் படிக்க

உள்ளுக்குள் நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது.

அதன்பின் துணி துவைக்கவில்லை... சாப்பிடவில்லை... வேறு எந்த வேலையும் செய்யவில்லை. அப்படியே பிரமை பிடித்த மாதிரி உட்கார்ந்துவிட்டாள். பால்காரர் வந்து குரல் கொடுத்தபோது மட்டும் எழுந்து போய் பால் வாங்கி வைத்து மூடினாள்.

மீண்டும் சுவரில் சரிந்து, முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்துவிட்டாள். அழுகை வந்தது. ஏமாற்றப்பட்டுவிட்ட உணர்வு ஓர் அவமானத்தையும் தோற்றுவித்தது.

இதற்காக– இவளுக்காகத்தான் அடிக்கடி கோயம்புத்தூர் போய் இருக்கிறான். ஆபீஸ் வேலை என்று பொய் சொல்லி இருக்கிறான். பத்து நாட்களுக்கு ஒரு முறை... பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை சென்றவன்– பின்னர் அடிக்கடிச் செல்லத் தொடங்கினான். ஒரு முறை அவன் திரும்பி வர ரொம்பவே காலதாமதம் ஆகிவிட்டது. இவள் பயந்து போய் அலுவலகத்திற்கு போன் செய்து கூட விசாரித்திருக்கிறாள்.

ஒரு முறை அப்படித்தான் 'நாட்கள் கடந்து' வீட்டுக்குள் நுழைந்ததும் வாசல் கதவை படாரென மூடித் தாழ்ப்பாள் போட்டாள். சரேலென்று அவனை இழுத்து, கட்டித் தழுவினாள். அவன் அதை எதிர்பார்க்காமல் தடுமாறிப் போனான்.

"ஏய்... ஏய்...எ... என்ன இது...? ம்..."– அவள் இன்னமும் மூர்க்கமாக அத்தனை நாள் தாபத்தையும் அந்த ஒரு விநாடியில் தீர்த்துக்கொள்கிற வேகத்தில் இறங்கவும்– அவன் குழப்பம் அடைந்தான்.

"ஏய் ராஜி... உடம்பெல்லாம் ஒரே வியர்வையும், அழுக்குமா இருக்கு. முதல்ல குளிச்சிட்டு வந்துடறேனே...?"

"ம் ஹூம், மாட்டேன்! ரெண்டு நாள்னு சொல்லிட்டு, வர்றதுக்கு ஒரு வாரம் ஆக்கினதுக்கு உடனடியா இந்தத் தண்டனைதான்..."

அவளது அணைப்பு அவனுக்குள்ளும் வேகத்தைக் கொடுத்தது.





# வெண் தழும்பு

சிகிச்சை இருக்க, கவலை எதற்கு?

வெண் தழும்புகள் மீது உரிய பலன் தெரியக்கூடிய புதிய மருந்து எங்களிடம் உள்ளது. தோலின் இயல்பு நிறத்திற்கு மாறி விரைவில் வெண் தழும்புகள் மறைந்துவிடும். முழுமையான நிவாரணத்திற்கு உத்திரவாதம். அப்படியிருக்க, வெண் தழும்புகள் பற்றி கவலை ஏன்? முழுமையான சிகிச்சைக்கு உடனே தொடர்பு கொள்ளவும்.



## மூலம் – அறுவை சிகிச்சை தேவையில்லை

எங்களது ஆயுர்வேத சிகிச்சை மூலநோய்க்கு முற்றிலும் நிவாரணம் அளிக்கிறது. முழு சிகிச்சைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.

## வயிறு பிரச்சினை

நாள்பட்ட வாயுக்கோளாறுக்கு எங்களது புதிய ஆயுர் வேத சிகிச்சை முழு நிவாரணமளிக்கிறது. வயிற்றில் அமிலத்தன்மை, மலச்சிக்கல், மன அழுத்தம், ஓய்வின்மை போன்றவற்றிற்கு புதிய ஆயுர்வேத சிகிச்சை உள்ளது. இதன் மூலம் நோயாளிகள் முழு நிவாரணம் பெறலாம்.

## உடல் பருமன் (வயிற்றுச் சதையை குறைக்க)

அதிகப்படியான கலோரிகளை எரித்து, பருமனான வயிறு, அதிக எடை, தொங்கும் கன்னச்சதை, குழந்தைப் பருவ கூடுதல் எடை, அசாதாரண தோற்றம் போன்றவற்றை கட்டுப்படுத்தி அழகாக மாற்றுகிறது எங்களின் ஆயுர்வேத சிகிச்சை. உடனே தொடர்பு கொள்ளவும்.

## நரை /முடி உதிர்தலை தடுத்தல்

எங்களிடம் ஹெர்பல் சிகிச்சை எடுத்துக் கொள்வதன் மூலம் முடி நரைப்பதும், உதிர்வதும் தடுக்கப்படுகிறது. சிகிச்சைக்குப்பின் உங்களது முடி வேகமாகவும், அழகாகவும் வளர்வதோடு முடி உதிர்தலும் கட்டுப்படுத்தப்படுகிறது. சிகிச்சைக்காக இன்றே தொடர்பு கொள்ளவும்.

BALAJI AAYURVED, GAYA
08294326088,08873983941

"இதுவா...? இதையா தண்டனைன்னு சொல்ற...? உன்னைப் பொருத்தவரை இதுதான் தண்டனைன்னா, ஒவ்வொரு முறையும் ஒரு வாரம் கழிச்சுத்தான் வருவேன்... என்ன...?"

"ம்...?"

"ச்சீ... போங்க நீங்க..."

கல்யாணமாகி அத்தனை வருடமான பின்பும் அவளிடம் ஆரம்பத்து வெட்கம் அடிக்கடி தலைகாட்டுகிற அழகைக் கண்டு வியந்தான் அவன்.

"எங்க போகச் சொல்ற ராஜி. திரும்ப கோயம்புத்தூருக்கா...? ஒரு வாரம் கழிச்சு வந்ததுக்கு இந்தத் தண்டனைன்னா ஒரு மாசம் கழிச்சு வந்தால்...?"

"ச்சீ... உங்களுக்கு வெட்கம், மானம் எதுவுமே கிடையாதா...?"

"இதுல என்ன வெட்கமும், மானமும்...? நான் வெட்கப்படாத ரெண்டு விஷயம் என்ன தெரியுமா...?"

"தெரியுமே..."

"என்ன சொல்லு...?"

"ஒண்ணு இது...?"

"கரெக்ட்; இன்னொண்ணு...?"

"இன்னொண்ணு...? சாப்பாடா?"

"இல்ல..."

"சிகரெட்...?"

"ம்ஹூம்..."

"அது ரெண்டுமில்லைன்னா... வேற... நீங்க குடிக்கமாட்டீங்க..."

"யோசிச்சுச் சொல்லு..."

"தெரியலை"

"தெரியலை...?"

"ம்ஹூம்..."

"ரெண்டாவதும் இதேதான்–"



"சீ! வேற வேலையில்லை உங்களுக்கு... எப்பப் பாரு இதே நினைப்பா...?"

"இப்ப யாரு ஞாபகப்படுத்தினது...?"

"சரி, சரி! மேலெல்லாம் ஒரே அழுக்கா இருக்குது பாருங்க. உடனே போய் குளிச்சிட்டு வாங்க. சாப்பிடலாம். உங்களுக்குப் பிடிச்ச கத்தறிக்காய் காரக் குழம்பு வச்சு, வாழைப்பூ துவையல் செய்திருக்கேன். சூடு பண்ணி எடுத்து வைக்கிறேன், சீக்கிரம் வாங்க..."

"என் பசியெல்லாம் அடங்கிடுச்சு ராஜி..."

"ம்..." என்று அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள் இவள்.

"அடங்கற ஆளைப் பாருங்க. குளிச்சிட்டு வாங்க. திரும்பப் பசி எடுக்கும். சாப்பிடலாம்..."

அவனை நெட்டித் தள்ளி குளியலறைக்கு அனுப்பினது ஞாபகத்திற்கு வந்தது. ·

'அந்த ஒரு வாரமும் அவன் கோயம்புத்தூரில் தனியாக இருக்கவில்லை. அதனால்தான் அவன் என்னைப் போல் தவித்துப் போகவில்லை. அருகாமைக்காக உருகவில்லை... நாட்கள் கடந்து சந்தித்து சாவதானமாக இருந்திருக்கிறான். ஆனால் நானோ... அந்தப் பிரிவும், வேதனையும் தாங்க இயலாதவளாக அவனை இழுத்து அணைத்து உருகித் தவித்து... எத்தனை பெரிய அவமானம்!

அவன் அந்த ஒரு வாரமும் வேறு ஒரு பெண்ணோடு– யார் அவள்...? என்ன பெயர்...?

கடிதத்தை மீண்டும் பிரித்துப் பார்த்தாள். 'கிரிஜா, வெறும் கிரிஜா இல்லை. அவனது பிரிவைத் தாங்க முடியாத கிரிஜா. அவனுக்காகக் காத்திருந்து தவிக்கும் கிரிஜா. அந்தக் காத்திருத்தலைத் தவிர்ப்பதற்காகக் கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சொல்லி கொஞ்சலும்... வேண்டலுமாக கோரிக்கை வைத்திருக்கும் கிரிஜா'

கீழ் உதட்டை இறுகக் கடித்து– உள்ளுக்குள் வெடித்துப் புறப்பட்ட விம்மலை அடக்க முயன்றாள். சட்டென்று தன்

கல்யாணம் ஞாபகத்திற்கு வந்தது.

"ராஜி... வாடி... அவங்கல்லாம் வந்துட்டாங்க. மாப்பிள்ளை பேருக்கேத்த மாதிரி ராஜா மாதிரித்தான் இருக்காரு. வெள்ளை வெளேர்னு உயரமா அழகா இருக்கார். இப்பதான் உள்ளே நுழையறாங்க! நீ வந்து இப்படி இந்த ஜன்னல் வழியா எட்டிப் பாரு..."

இவள் பார்த்தாள். அதே நேரத்தில் சொல்லி வைத்த மாதிரி ஏதோ உந்துதலில் தலையை உயர்த்தி, அவனது மாடி ஜன்னலை நோக்க–

சிலிர்த்துப் போனாள் இவள். அந்த ஒற்றைப் பார்வையில் கரைந்து போனாள்.

'அண்ணலும் நோக்கினாள், அவளும் நோக்கினாள்' என்ற அந்தக் காவியக் கண் கலப்பிற்குப் பின் ஏற்பட்ட தூய்மையான அன்பு தங்களுடையதுதான் என்று நினைத்துக்கொண்டாள். ராஜாராமன் என்ற பெயரை நூறு முறை சொல்லிப் பார்த்துக்கொண்டாள். அவனை ராமனாகவும், தன்னைச் சீதையுமாய் கற்பனை செய்து மனநிறைவு கண்டாள்.

அவனைக் கவுசல்ய புத்திரனாய்–

பெண் பார்த்துவிட்டுப் போன பின் மாமா, மாடிக்கு வந்து சொன்னது நினைவுக்கு வந்தது.

"ராஜி... பிள்ளையைப் பார்த்தியா? ஒனக்கு பிடிச்சிருக்குதா...? அவங்களுக்குப் பிடிச்சிருக்கிறதா சொல்லிட்டுப் போயிட்டாங்க. நீ என்ன சொல்ற...?"

"நான் என்ன மாமா சொல்றது...? நீங்க பார்த்து எது செய்தாலும் சரி..."

"அதெல்லாம் இத்தனை நாள் செய்த மற்ற காரியத்துக்கெல்லாம் சரியா இருக்கும். உன்னை வளர்த்து ஆளாக்கி, படிக்க வச்சதுக்கெல்லாம் சரி. ஆனால்... இது வேற விஷயம். இதுல உன் சம்மதம் முக்கியம். 'அப்பா, அம்மா இல்லாத பொண்ணை வற்புறுத்தி கல்யாணம் செய்து வச்சிட்டான்' என்கிற பழி வரக்கூடாது பாரு...?"



இவள் பதில் சொல்லும் முன், மாமி வந்து குறுக்கிட்டாள்.

"ஏங்க... நீங்க வேற தனியா சம்மதம் கேட்கணுமா...? அதான் சம்மதம்னு அவ முகத்திலேயே எழுதி வச்சிருக்குதே. அதுகிட்ட போய் கேட்டுகிட்டு...! ரெண்டு பக்கமும் பிடிச்சுப் போயிடுச்சு. ஆனா, அவங்க கேட்கிற பத்தாயிரம் ரூபாய் பணமும், இருபது பவுன் நகைக்கும் எங்க போறது...?"

"அதெல்லாம் நான் பாத்துக்குவேன். அம்மா, அப்பா இல்லாத பொண்ணு! அது ஆசைப்படி செய்து குடுத்துடணும். அக்காவும், அத்தானும் உயிரோட இருந்திருந்தால் இந்நேரம் இந்த இருபது பவுன் நகைங்க செய்து போட்டிருக்கமாட்டாங்க...? அதை நாம செய்ய வேணாம்...? அது பெரிய விஷயமில்ல. இவளுக்கு பையனைப் பிடிக்கிறதுதான் பெரிய விஷயமா இருக்கும்னு நினைச்சேன்."

"பிடிச்சிருக்குல்ல, பின்ன என்ன...? கல்யாணத்துக்கு நாள் குறிக்க வேண்டியதுதான்..."

ஒரு குறை வைக்கவில்லை மாமா. தன் பெண் கோகிலாவிற்கு செய்ததற்கு மேலாகத்தான் திருமணத்தை சிறப்பாக நடத்தி அனுப்பினார்.

கையில் பத்தாயிரம், இருபது பவுன் நகை, பாத்திரங்கள், கட்டில், பீரோ, மெத்தை என ஒரு குறையில்லை இதுவரை. இவளும் அவனது முகம் சிணுங்குகிற மாதிரி நடந்ததே இல்லை.

ஆனால்...

இவள்தான் சீதாப் பிராட்டியாக இருந்திருக்கிறாளே தவிர, அவன் ராமனாக இல்லை. இவளைப் போல் அவன் திருமண பந்த காதலில் கரையவில்லை. இவளிடம் பரிபூரணமாக ஐக்கியமாகவில்லை. இவளுடன் அப்படி இருக்கிற மாதிரியானதொரு பாவனையில் கோவலனாக எங்கோ கோயம்புத்தூரில் இருக்கும் மாதவியான– கிரிஜாவிடம் சென்றிருக்கிறான்.

'யார் அந்த கிரிஜா...?'

'இவருக்கு எப்படிப் பழக்கம்?'

'எத்தனை நாளாகப் பழக்கம்?'

'எதனால் ஏற்பட்ட பழக்கம்?'

இந்தக் கேள்விகள் இவள் மனதை அரித்தன.

'இப்படி ஓர் பழக்கம் ஏற்பட நான் என்ன குறை வைத்தேன்? எதற்காக ஏற்பட்டது அது?'

கணவன் வந்ததும் இவளது அத்தனைக் கேள்விகளுக்கும் சிறிதும் சங்கடமின்றி, தயக்கமின்றி குற்றம் செய்த குறுகுறுப்பு- வருத்தமின்றி அழுத்தம் திருத்தமாய் பதில் சொன்னான் அவன்.

"யார் அவள்னால்- கிரிஜா, ஒரு பொண்ணு..."

"................."

"எப்படிப் பழக்கம்னால்- ஆபீஸ் விஷயமா அவ வேலை செய்யற கம்பெனி தயாரிக்கும் மிஷின்களை எங்க கம்பெனிக்கு வாங்கப் போறபோது சந்திச்சது. அந்த கம்பெனியோட நிர்வாக அதிகாரிக்கு அவ 'பர்சனல் செக்ரட்டரி' "

"................."

"எத்தனை நாளாய்ப் பழக்கம்னு சரியா- கணக்கா சொல்லணும்னால்- ஒன்பது மாசம், ஆறு நாள்... இன்னியோட சேர்த்து ஏழாவது நாளாப் பழக்கம்."

"போதும். நிறுத்துங்க!"- என்று வெடித்தாள் இவள்.

"................"

"இப்படிப் பதில் சொல்றதுக்கு வெட்கமாயில்ல உங்களுக்கு...?

"இதுல என்ன வெட்கம்...?"

"எதுக்குத்தான் நீங்க வெட்கப்பட்டிருக்கீங்க... சொல்லுங்க....?

"................"

"நான் உங்களுக்கு என்ன குறை வச்சேன்...? எதுல குறை வச்சேன்...? உங்க மனசுக்கேத்த மாதிரி ஒரு நல்ல பொண்டாட்டியா நடந்துக்கலியா...? சொல்லுங்க, என்ன குறை கண்டீங்க என்கிட்ட...?"



"உன்கிட்ட ஒரு குறையில்லை ராஜி. நீ ஒரு நல்ல பொண்டாட்டியாகத்தான் நடந்துக்கிட்ட, இப்பவும் நடந்துக்கிட்டிருக்க..."

"பின்ன...?"

"........"

"பின்ன எதுக்கு அவ...?"

"போறலை ராஜி..."

"என்ன... போறலை...?"

"எல்லாமே போறலை..."

"எல்லாமேன்னால் என்ன அர்த்தம்?"

"நீ மட்டும் போறலைன்னு அர்த்தம்!"

அதிர்ந்து போனாள் இவள். அப்பட்டமான அந்தப் பதிலில் சில விநாடிகள் உறைந்து போனாள். உண்மையை அவன் அப்படியே சொல்லி இருக்கலாம். அதுதான் காரணமாக இருக்கலாம். ஆனால்... அதைச் சொன்ன விதம், தோரணை...

அந்த வேகமும், சூடும் தாங்காமல் உள்ளுக்குள்ளேயே துடித்துப் போனாள். முகத்தைத் தாக்கின நிஜத்தை தாங்குகிற சக்தியற்று மவுனமாகத் தவித்தாள். உண்மை அதுவாக இருந்தாலும் அவன் இதை வேறுவிதமாகச் சொல்லி இருக்கலாம். மென்மையாய், இதமாய் தெரியப்படுத்தி இருக்கலாம். இப்படி வார்த்தைக் கொடுக்கால் கொட்டியிருக்க வேண்டாம்.

'போறலை.'

'எதுவும் போறலை...'

'நீ மட்டும் போறலைன்னு அர்த்தம்.'

அந்த அர்த்தம் மட்டுமின்றி நிறைய அர்த்தங்கள் பிடிபட்டதில் இவள் அவமானத்தாலும், ஆத்திரத்தாலும் முகம் சுறுசுறுவென்று சிவக்கக் கேட்டாள்.

"அதே மாதிரி எனக்கும் போறாமல் போயிருந்தால்...? நானும் போறலைன்னு நினைச்சால்...?"

"உன் இஷ்டப்படி நீ நடந்துக்கலாம். அதை நான் தப்பு

சொல்லமாட்டேன். தப்பா நினைக்கமாட்டேன். நாமெல்லாம் கொஞ்ச காலம் மட்டுமே வாழப் போறவங்க. அதுக்குள்ள எதுக்கு இத்தனை கட்டுப்பாடுங்க? மனசுக்குப் பிடிச்ச மாதிரி சுதந்திரமா– சந்தோஷமா இருந்துட்டுப் போகலாமே! அதை விட்டுட்டு எதுக்காக நமக்கு, நாமே ஒரு விலங்கைப் போட்டுக்கிட்டு, வாழ்க்கையை ஜெயிலாக்கிக்கிட்டு அவஸ்தைப் படணும் சொல்லு...?"

"ச்சீ! நீங்களும் ஒரு மனுஷனா...? கட்டின பொண்டாட்டிக்கிட்ட இப்படி பேச வெட்கமாயில்ல...?"

"இதுல வெட்கப்பட என்ன இருக்கு...? மனசுல நினைக்கிறதைச் சொன்னேன்..."

"இந்த மாதிரி மனசுல இன்னும் எந்தெந்த நினைப்பெல்லாம் இருக்கு...?"

"எதைப் பற்றின்னு குறிப்பா கேட்டால்தானே பதில் சொல்ல முடியும்..."

"அவளைப் பற்றி..."

"எவளைப் பற்றி...?

"ஓஹோ... அந்த மாதிரி நிறைய அவள்கள் இருக்காங்க போல. அதான் எவள்னு திருப்பிக் கேட்கிறீங்க. உங்களுக்குத்தான் வெட்கம், மானம் எதுவுமில்லை. அப்படியே உங்களோட அந்த அவள்களுக்கும் இல்லை போலிருக்கு. அதான் இப்படி எவன் கிடைப்பான்னு அலைய..."

"அவளைப் பற்றி பேசுறத நிறுத்துறியா... இல்லையா...?"

"ஏன் அவளைப் பற்றிப் பேசினால் பொத்துக்கிட்டு வருது...?"

"ஏன்னா... நீ நினைக்கிற மாதிரி அவள் மட்டமானவள் இல்லை..."

"சரி, மட்டமானவ இல்லை. எத்தனை உயரமானவள்னு தெரிஞ்சுக்கலாமா?..."

"நான் சொல்லித் தெரிஞ்சுக்கிறதைவிட, நீயே பார்த்துப்



பழகித் தெரிஞ்சுக்கிறதுதான் நல்லதுன்னு– அவளைப் போய்க் கூட்டிக்கிட்டு வர்றதா இருக்கேன்..."

"கூட்டிக்கிட்டு வந்து...?"

"வந்து... என்ன...? அவளும் நம்ம கூட இருப்பா. மூணு பேரும் சந்தோஷமா இருக்கப் போறோம்."

"ஒரு போதும் நடக்காது. அதுக்கு நான் சம்மதிக்கவே மாட்டேன்."

"உன் சம்மதத்தை நான் எதிர்பார்க்கலை. அதுக்காக காத்துக்கிட்டிருக்கவும் போறதில்லை. இந்த வாரக் கடைசியில் போய் அவளைக் கூட்டிட்டு வர்றதா இருக்கேன். உனக்கு அது பிடிக்கலேன்னால், அவ இந்த வீட்ல கூட தங்கறது இஷ்டமில்லேன்னால், நீ கிளம்பி உங்க மாமா வீட்டுக்கே போறதானாலும் போகலாம்..."

"என்ன... என்ன சொன்னீங்க...?"

"ஒண்ணுமில்ல! உன் இஷ்டம் எதுவோ அதன்படி நீ இருக்கலாம்னு சொன்னேன். அவ்வளவுதான்..."

இவள் அன்றிரவு முழுதும் தூங்கவில்லை. மனசு துடிக்கத் துடிக்க விழித்தபடி வெறுமனே படுத்துக்கொண்டிருந்தாள்.

பக்கத்தில் எந்தவித பாதிப்பும் இல்லாமல் நிம்மதியாக தூங்குகிற அவனை அளவற்ற வெறுப்புடன் திரும்பிப் பார்த்தாள். 'இப்படிக்கூட ஒருவனால் இருக்க முடியுமா?' என்று தோன்றியது.

மனிதத்தன்மை என்பது சிறிது கூட இல்லாமல் இவ்வாறு நடந்துகொள்ள முடியுமா...? என்ன செய்யலாம் இவனை? இவன் கோயம்புத்தூர் போய் அவளை அழைத்து வருவதில் இருந்து தடுத்து எவ்வாறு நிறுத்து முடியும்...? யாரால் அதைச் செய்ய முடியும்...?'

மாமா...!

சட்டென்று ஒரு பிடிப்பு கிடைத்த பிரகாசம் தோன்றியது இவள் முகத்தில். 'மாமாதான் இதற்கு சரி. மாமாவால்தான் இவனைக் கேள்விகள் கேட்க முடியும்! உரிமையோடு அதட்ட

முடியும்!! இவன் செய்யப் போகும் வேலையில் இருந்து தடுத்து நிறுத்த முடியும்!!!

ஆனால், எப்படி மாமாவை வரவழைப்பது...?

கடிதம் எழுதி அவர் புறப்பட்டு வருவதற்குள் இவன் கிளம்பி போய்விடுவான். அதனால் இவன் கிளம்பும் முன் அவர் வந்தாக வேண்டும். எப்படி...? எப்படி வரவழைப்பது? தந்தி கொடுக்கலாமா? அல்லது தஞ்சாவூரில் அவர்களது வீட்டிற்கு போன் செய்து மாமாவைக் கூப்பிடச் சொல்லி, அவரிடம் பேசி வரச் சொல்லலாமா...? என்ன செய்யலாம், எது செய்தால் சரியாக இருக்கும்?

அன்றிரவு முழுதும் யோசித்து மறுநாள் பிற்பகல் வரை ஒரு முடிவிற்கும் வர முடியாமல் தவித்துத் தூங்கிப் போனவளை மூன்று மணி அளவில் அழைப்பு மணி அடித்து எழுப்பியது.

கதவைத் திறந்து பார்த்தாள்.

மாமா...!

## 2

**அ**ன்று மாலை ஏழு மணி அளவில் வீடு திரும்பிய ராஜாராமன், வாசல் வராந்தாவில் மாமாவைப் பார்த்தான். பளிச்சென்று புரிந்துகொண்டான்.

ராஜிதான் அவரை வரவழைத்திருக்க வேண்டுமென்ற ஊகத்தில்– பின்னால் கால் கழுவப் போனவன்– ராஜியைத் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

"மாமாவை நீதானே வரவழைச்ச...?"

"இல்ல. அவராகத்தான் வந்திருக்காரு..."

"எல்லாத்தையும் சொல்லிட்ட இல்ல..."

"இன்னுமில்ல, ஆனா சொல்லப் போறேன்."

"சொல்லு, சொல்லு, தாராளமாச் சொல்லு! நானும்



வேணும்னால் கூடச் சேர்ந்து சொல்றேன்..."

கூடச் சேர்ந்து சொல்வதாகச் சொன்னவன்– கைகால் கழுவி, உடை மாற்றிக்கொண்டு வந்து உட்கார்ந்து, மிகச் சரளமாய்– சாதாரணமாய் பேச்சை ஆரம்பித்தான்.

"எப்ப மாமா வந்தீங்க...?"

"இப்பத்தான் ரெண்டு மணி பஸ்ல வந்து இறங்கி நேரா வீட்டுக்கு வந்தேன்..."

"காப்பி, டிபன் சாப்பிட்டீங்களா...?"

"காப்பி குடிச்சேன். டிபன் எதுவும் செய்யலை ராஜி. நேரா சாப்பாடுதான்."

"அப்ப சாப்பிடப் போகலாமா...? சாப்பிட்டுக்கிட்டே பேசலாம்..."

"ஓ... தாராளமா...? என்ன உங்களுக்கு சீக்கிரமா பசிக்க ஆரம்பிச்சிட்டுதா...?"

"ம்... கொஞ்சம் பசிக்குது...."

"அம்மா ராஜி! தட்டு எடுத்து வை, மாப்பிள்ளை பசியோட வந்திருக்காரு பாரு..."

சாப்பாட்டின்போது அவன்– ராஜியைக் ஓரக் கண்ணால் பார்த்தவாறு– மாமாவிடம் மெல்ல கேள்வி கேட்க ஆரம்பித்தான்.

"ஏன் மாமா... நீங்க ஏன் ரெண்டாம் கல்யாணம் செய்துக்கிட்டீங்க...?"

"என்ன மாப்பிள்ளை நீங்க... எப்பவோ பதினைஞ்சு வருஷத்துக்கு முன்னால நடந்த கல்யாணத்தைப் பத்தி இப்ப கேட்கறீங்க...?"

"சொல்லுங்க மாமா... எனக்குத் தெரிஞ்சுக்கணும் போல இருக்கு...?"

"என்ன தெரிஞ்சுக்கப் போறீங்க...?"

"நீங்க ஏன் இன்னொரு கல்யாணம் செய்துக்கிட்டீங்கங்கிறதை..."

"அதுதான் தெரிஞ்ச விஷயமாச்சே மாப்பிள்ளை. பொம்பளை உதவி இல்லாமல் ரெண்டு குழந்தைகளை வளர்க்கிறதுங்கறது நடக்கிற காரியமா...? அதான் செய்துக்கிட்டேன்..."

"ஏன் மாமா, உங்க கல்யாணத்தின்போது உங்க பொண்ணு கோகிலாவுக்கு என்ன வயசு...?"

"ம்... இப்ப அதுக்கு முப்பதாகுதுன்னால் அப்போ... பதினைஞ்சு வயசு..."

"பையனுக்கு..."

"அவன் கோகிலாவைவிட ரெண்டு வயசு சின்னவன்னால் பார்த்துக்குங்களேன்..."

"அப்படின்னா அவனுக்குப் பதிமூணு இருக்குமில்ல...?"

"இருக்கும்."

"ஏன் மாமா... பதினைஞ்சு வயசும், பதிமூணு வயசுமா குழந்தைங்க. அவங்களை வளர்க்கணுமா... ஏதோ மூணு வயசு, நாலு வயசுன்னாலும் வளர்த்து ஆளாக்கணுங்கிற கவலை இருக்கும். பொம்பளை உதவி தேவைப்படும். பதினைஞ்சு வயசுப் பொண்ணு இருக்கிறப்ப அந்தப் பிரச்சினையெல்லாம் இருந்திருக்காதே?"

"மா...ப்...பிள்ளே..."

"இல்ல மாமா... எல்லார்கிட்டேயும் சொன்ன அதே காரணத்தை என்கிட்டேயும் சொல்றீங்க பார்த்தீங்களா? நெஜமான காரணம் தெரியணும்னுதானே கேள்வி கேட்கறேன்..."

அவர் சங்கடமாகத் திரும்பி– சமையலறையின் பக்கம் பார்வையை ஓட்டினார்.

ராஜாராமன் புரிந்துகொண்டான். குரலை சற்றுத் தணித்து மெதுவாகப் பேசினான்.

"ராஜி உள்ள இருக்காளேன்னு பார்க்கறீங்களா...?"

"ஆ... ஆமா மாப்பிள்ளே..."

"அவ சமையலறையில இல்லை. வெளிய தோட்டத்துப் பக்கம் போயிருக்கா. தயங்காம– பயப்படாமப் பேசலாம் நீங்க..."



–கதவுக்கு பின்புறம் ராஜி நின்று இதைக் கேட்டுக்கொண்டிருப்பது தெரிந்தும் வேண்டுமென்றே சொன்னான் அவன்.

அவர் தயங்கித் தயங்கிப் பேச்சைத் தொடர்ந்தார்.

"அது வந்து மாப்பிள்ளே... குழந்தைங்களைப் பார்த்துக்குன்னு ஒப்புக்கு ஒரு காரணத்தைச் சொன்னாலும்... நிஜமான காரணம்... வந்து... வந்து..."

"சும்மாச் சொல்லுங்க... நானும் ஆம்பளைதான்..."

"வந்து அப்போ எனக்கு வயசு நாற்பதுதான் மாப்பிள்ளே. அப்படி எல்லாமே அடங்கிப் போன வயசோ, அடக்கிக்கிற வயசோ இல்லை. அதனாலதான்... அங்க இங்கன்னு போய் கெட்டுப் போயிடக் கூடாதேன்னு ரெண்டாம் கல்யாணம் கட்டிக்கிட்டேன்..."

"அப்படீன்னா?"

"போங்க மாப்பிள்ளே... என்னமோ..."

"நிஜம்மாத்தான் கேட்கறேன் மாமா... கொஞ்சம் விளக்கமா சொல்லுங்களேன்..."

"இதையெல்லாம் விளக்கி சொல்லிட்டிருக்க முடியுமா...? நீங்களா புரிஞ்சுக்கணும்...?"

"ஓ.கே. இப்பப் புரியுது. நீங்க சொல்ல வர்றது... செக்ஸ். அதுதானே! அது தேவையானால் இன்னொரு கல்யாணம் செய்துக்கிறதில் என்ன தப்பு...?"

"சேச்சே... தப்புன்னு யாரு சொன்னது? எவன் சொன்னான்...?"

"இல்ல... பொதுவா ரெண்டாம், மூணாம் கல்யாணம்னால் என்னவோ மகாப் பெரிய குற்றம் மாதிரி உலகம் பார்க்குதே...?"

"உலகத்துக்கு வேற வேலையில்ல... விடுங்க. என்னைக் கேட்டால் எதுலயும் தப்பில்லை மாப்பிள்ளை. தப்பு, சரின்றதெல்லாம் அவங்கவங்க தேவைகளையும்... அந்தந்த சூழ்நிலையையும் பொறுத்த விஷயம்..."





"அதான் நானும் சொல்ல வரேன் மாமா. ரெண்டாம் கல்யாணம் செய்துக்கிறது மகாப் பெரிய தப்புன்ற மாதிரி ராஜி பேசறா. நீங்களே அவகிட்ட சொல்லுங்க. ராஜி... ராஜி... மாமா கூப்பிடறாரு பாரு... இங்க வா..."

கதவின் பின்புறமிருந்து வெளிப்பட்ட ராஜி, குரல் கரகரக்கக் கேட்டாள்.

"ஏன் மாமா... நீங்க முதல் பெண்டாட்டி செத்துப் போனாப்புறம்தானே ரெண்டாம் கல்யாணம் செய்துக்கிட்டீங்க? முதல் பெண்டாட்டி குத்துக்கல்லாட்டம் இருக்கிறப்ப இன்னொருத்தியைக் கூட்டிட்டு வந்து வீட்ல வச்சுக்குவேன்னு சொன்னால் அது தப்பு இல்லாம வேறென்ன...? மகா பாவமில்லாம வேறென்ன...? துரோகமில்லாம வேறென்ன? சட்டத்துல கூட அதுக்கு இடமில்லை தெரியுமில்ல...? நான் வழக்கு போட்டால் உள்ள போக வேண்டியது வரும் தெரியுமில்ல...?"

முதல் முறையாகப் பிரச்சினையின் நுனி பிடிபட்டது அவருக்கு.

"என்ன ... என்ன...?" என்று அதிர்ந்து போனார் அவர். பதறி எழுந்து நின்று அவனைப் பார்த்தார்.

தான் ஏதோ விளையாட்டுத்தனமாகப் பேசப் போய்- அது ராஜியைப் பாதித்துவிடுமோ என்று பயந்தார்.

"என்ன மாப்பிள்ளே இது...?" என்றபோது, குரல் கரகரவென்று இருந்தது.

ஆனால், அதற்கும் நிதானமாகத் தலையை நிமிர்த்தினான் ராஜாராமன். இதெல்லாம் எதிர்பார்த்ததுதான் என்கிறாற்போல் மிக அமைதியாய் அவரைப் பார்த்துக் கேட்டான்.

"என்ன...?"

"ராஜி என்னவோ சொல்றாளே... நிஜமா மாப்பிள்ளே...?"

"நிஜம்தான்."

"ஐயோ... நிஜம்னு நீங்க நிதானமாக ஏத்துக்கிறதைப் பார்த்தால் பயமா இருக்கே! ராஜி சொன்ன மாதிரி இன்னொரு பொண்ணைக் கூட்டிட்டு வந்து இந்த வீட்லயா வச்சுக்கப் போறீங்க...?"

"ஸாரி மாமா... வச்சுக்கப் போறதில்லை. கல்யாணம் பண்ணி மனைவியாக்கிக்கப் போறேன்..."

"என்ன...! இவ உயிரோட இருக்கிறப்ப இன்னொரு கல்யாணமா...? இது என்ன நியாயம் மாப்பிள்ளை...? எந்த ஊருக்கு அடுக்கும்...? அப்படி இன்னொருத்தியைக் கூட்டிட்டு வர்ற அளவுக்கு..."

"திருப்பித் திருப்பி 'கூட்டிட்டு வரேன், வச்சுக்கப் போறேன்'னு கொச்சையா பேசாதீங்க. அவ ரொம்ப நல்ல பொண்ணு. படிச்சு, நல்ல வேலையில இருக்கா. நாங்க கல்யாணம் பண்ணிக்கப் போறோம்னு சொன்னேன்..."

"அது சரி... படிச்ச, நல்ல வேலையில இருக்கிற நல்ல பொம்பளை செய்யற வேலையா இது...? ஏதோ இதாவது கெடைச்சதேன்னு ஒட்டிக்கிற..."

"மாமா! இப்படிப் பேசறதை முதலில் நிறுத்துங்க."

"சரி, கடைசியா என்னதான் சொல்றீங்க...? அப்படி கூட்டிட்டுதான் வருவேன்றீங்களா?"

"ஆமா..."

"இதே வீட்லதான் அவளும் இருக்கப் போறாளா?"

"அப்படித்தான்!"

"அப்படின்னா ராஜி இங்க இருக்கமாட்டா..."

"நல்லது. நீங்க தாராளமா அவளைக் கூட்டிட்டுப் போகலாம். அதுல எனக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை."

"என்ன...?"

மாமா அதிர்ந்து போனார்.

உடம்பு முழுதும் பதறியது. வார்த்தைகள் தடுமாறின.

"அடப் பாவி!"

"நீங்க என்ன சொன்னாலும் அது என்னை பாதிக்கப் போறதில்லை..."

"வக்கீல் நோட்டீஸ் கொடுத்து. கோர்ட்டுக்கு இழுத்தால் கூடவா...?"



"ஆமாம்! எல்லாத்துக்கும் நான் தயாரா இருக்கேன்னு ஏற்கெனவே சொல்லியாச்சு..."

"எது எப்படிப் போனாலும் அந்தப் பொண்ணுதான் தேவைன்னு முடிவு பண்ணிட்டீங்க...?"

"அதையும் அப்பவே சொன்னதா ஞாபகம்."

"அந்த அளவுக்கு வெறுத்துப் போகும்படி ராஜி என்ன தப்பு பண்ணினா...?"

"என்ன பேசுறீங்க! ராஜியை வெறுக்கிறதா சொல்லவே இல்லையே... நான் இப்பவும் அவளை விரும்புறேன்... நேசிக்கிறேன்."

"அப்படின்னா...? எனக்குப் புரியலை மாப்பிள்ளை; கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க..."

"ராஜியையும் எனக்குப் பிடிச்சிருக்கு. அந்தப் பொண்ணையும் பிடிச்சிருக்குன்னுதான் சொல்ல வரேன். கொஞ்சம் ஒத்துழைச்சி நடந்துக்கிட்டா மூணு பேரும் சந்தோஷமா வாழலாம்னுதான் சொல்றேன்..."

அதைக் கேட்டு மாமா இரவு முழுதும் யோசித்தார்.

மறுநாள் காலை ஊருக்குக் கிளம்பும் முன் ராஜியைக் கூப்பிட்டு மெதுவாகச் சொன்னார்.

"ராஜி... மாப்பிள்ளை உன்னைப் பிடிக்கலேன்னு சொல்லலை. அவளையும் கூட்டிட்டு வர்றதாதான் சொல்றார். அவர் சொல்ற மாதிரி நீ கொஞ்சம் ஒத்துப்போய் வாழறதைத் தவிர வேறு வழி இல்லேன்னு நினைக்கிறேன். மாப்பிள்ளை ஒண்ணும் புதுசா இப்படி செய்திடலை. முக்கால்வாசி ஆம்பிளைங்க அப்படி, இப்படித்தான் இருக்காங்க.

தைரியம் இருக்கிறவங்க வெளிப்படையா தாலி கட்டி கூட்டிட்டு வராங்க. இல்லாதவங்க சின்னவீடு பார்த்து இலை மறைவு காயா வச்சுக்கறாங்க. இது ஒண்ணும் பெரிய விஷயமில்லை. நம்ம குலதெய்வம் முருகரு ரெண்டு பெண்டாட்டிக்காரருதான். கிருஷ்ணரை எடுத்துக்க பாமா, ருக்மணின்னு ரெண்டு பேர் தோள்லயும் கை போட்டுக்கிட்டு ஜம்முன்னு நிக்கறாரு. அதனால்

இதைப் பெரிசுபடுத்தி என் கூட கிளம்பி வந்தியானால், உன் வாழ்க்கைதான் வீணாப்போகும்.

என்னைக் கேட்டால் நீதான் கொஞ்சம் விட்டுக் கொடுத்து அரவணைச்சுப் போகணும்னு சொல்வேன். புத்திசாலிப் பொண்ணு. உனக்கு இதுக்கு மேல சொல்ல வேணாம். அதனால் அனுசரிச்சு நடந்துக்க. என்ன...? நான் வரட்டுமா? வரேன். சாயந்திரம் மாப்பிள்ளை வந்தால் சொல்லிடு..."

அவர் கிளம்பிப்போன மறுநாளைக்கு மறுநாள் கிரிஜாவை அழைத்து வர ராஜாராமனும் கோயம்புத்தூர் புறப்பட்டுப் போனான்.

அந்த நிமிடத்தில் இருந்து இவள் வெந்து தணிந்து சாம்பல் பூத்த தணல் மாதிரி உள்ளுக்குள் புகைந்துகொண்டிருந்தாள்.

## 3

**வா**சலில் ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

ஏதோ ஒரு உந்துதலில் மெல்ல எழுந்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். வந்த ஆட்டோ இவள் வீட்டு வாசலில்தான் நின்றது.

முதலில் ராஜாராமன் இறங்கினான். பின்னால் வெள்ளை வெளேறென்று– குதிகால் உயர்ந்த சிவப்பு செருப்பு தெரிய– அவள் மெதுவாக கீழே குதித்தாள். நல்ல களை. படிப்பின் மெருகு தெரிகிற முகம். கண்களும், மூக்கும் சற்றே உள்ளடங்கி– சின்ன வாயுமாக தனியான ஒரு லட்சணம்.

தன்னைவிட அவள் கூடுதல் அழகு. அதிகம் படித்தவளாக இருக்க வேண்டும். தான் படித்த மாதிரி ஒப்புக்கு ஒரு பட்டம் வாங்கினவளாகத் தெரியவில்லை. தனக்கு தொடர்ச்சியாக நான்கு வரி ஆங்கிலத்தில் கடிதம் எழுத வராது.

நினைவுகள் இவள் மனதை சற்று பின்னோக்கி இழுத்தன.

"என்னங்க.... ரேஷன் ஆபீசுக்கு ஒரு லெட்டர் கொடுக்கணும்னு



சொன்னேனே, அதை எழுதிக் குடுங்க..." என்று அவன் எதிரில்தான் போய் நிற்பாள்.

"என்ன ராஜி, ஆபீஸ் கிளம்பறப்ப கேட்கறே... காலையில இருந்து என்ன செய்தே...? படிச்சிருக்க இல்ல... எழுத வேண்டியதுதானே...?"

"ம் ஹூம். எனக்கு வராது. நீங்களே எழுதித் தந்துடுங்க..."

"நீயெல்லாம் எதுக்குப் படிச்சே...? காலேஜ்ல ஒரு இடம் வீணானதுதான் மிச்சம்! சரி... சரி பேப்பர், பேனா கொண்டு வா..." – முன்னர் நடந்த நினைவுகள் மனதிற்குள் வந்துபோயின.

இவளைப் போல்– ஒரு கடிதம் எழுதக்கூட வேறு ஒருவரின் உதவியை எதிர்பார்க்கிறவளாக அவள் இருக்கமாட்டாள். பெரிய கம்பெனியின் நிர்வாக அதிகாரிக்கு காரியதரிசியாக இருந்தவள் என்றால் நிஜமான தகுதி பெற்றவளாக இருக்க வேண்டும். வெறும் தகுதி, திறமை மட்டுமின்றி இத்தனை அழகாக வேறு இருக்கிறாள்.

இப்படி அழகு, படிப்பு, திறமை, கைநிறைய சம்பாத்தியம் எல்லாம் இருப்பவள் எதற்காக ராஜாராமனிடம் வாழ வேண்டும்? இவளைவிடப் படித்தவனாக– பெரிய பதவியில் இருப்பவனாக– பணக்காரனாக ஒரு நல்ல வரன் கிடைத்திருக்குமே... பின் எதற்காக இவனை... இல்லை, இவனிடம்...?

ஒருவேளை இவளது அழகில்– தன்னைப் போலவே அவனும் மயங்கி விழுந்திருப்பானோ...? அல்லது அவனாக அவளை விடாப்பிடியாகத் துரத்திப் பிடித்திருப்பானோ...? எத்தனை துரத்தினாலும் ஒரு பெண் தன் மனசுக்குப் பிடிக்காத ஒருவனுக்கு ஒருபோதும் எளிதில் உடன்படமாட்டாள்.

அதுவும் இவள் 'ராஜா, ராஜா' என்று உருகி உருகிக் கடிதம் எழுதினவள். 'நீயில்லாமல் நானில்லை' என்று கரைந்தவள், அப்படிக் காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கிக் கடிதம் எழுத வேண்டுமானால்–

அவள்... அவனிடம்–

அழைப்புமணி அழுத்தப்பட்ட வேகத்தில் இவள் திடீரென

தாக்கப்பட்டவளாக எழுந்து போய் வராந்தாக் கதவைத் திறந்துவிட்டு சரேலென்று திரும்பி, தன் படுக்கை அறைக்குள் நுழைந்துவிட்டாள். அவனையோ, அவளையோ ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. வந்து கட்டிலில் உட்கார்ந்தவளுக்கு மூச்சு வேகமாக வந்தது. மார்பு ஏறி இறங்கியது. மனசின் படபடப்பு அதிகமாகி, கண்ணோரம் நீர் கட்டிக்கொண்டது.

அவள் வந்துவிட்டாள். சொன்ன மாதிரி அவன் போய் அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். இனி... இனி... தன் நிலைமை என்ன...? தான் என்ன செய்யப்போகிறோம்? இதே வீட்டில் அவர்களுடனேயே இருப்பதா...? அல்லது வீட்டைவிட்டுப் போவதா...?

வீட்டைவிட்டுப் போவதானால் எங்கே போவது? கணவனை அனுசரித்து இருப்பதுதான் சரி என்று மாமா கூட சொல்லிவிட்டுப் போய்விட்டார். வாழாவெட்டியாக அங்கு வந்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கோடிட்டு காட்டிவிட்டார். அதனால் அங்கும் போக முடியாது!

மாமா வீடு இல்லையென்றால், வேறு எந்த வீட்டிற்குப் போக முடியும், யார் இருக்கிறார்கள்? எங்காவது விடுதியில் தங்கிக்கொள்ளலாம் என்றால் அதற்கும் வழி இல்லை. கையில் வேலையோ, சம்பளமோ இல்லை. வேறு பணம் எதுவும் கிடையாது. இந்த நிலைமையில் என்ன செய்ய முடியும்?

"வாசல்ல அவ வந்து நின்னுட்டிருக்கா...?"

அறை வாசலில் ராஜாராமனின் குரல் கேட்டு வெறுப்பும், கோபமும், ஆத்திரமுமாகத் தலை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

"நிக்கட்டுமே, அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?"

"வீட்டுக்கு வந்தவங்களை வான்னு கூப்பிடமாட்டியா...?"

"நான் வரச் சொல்லிக் கூப்பிடலை! கூப்பிடாம வந்தவங்களுக்குத் தானாக உள்ள வரவும் தெரியும். வீடுதான் திறந்திருக்கே...! உள்ளே நுழையறதுக்கு என்ன...?"

"ரா...ஜி...!"



"அடிக்கப் போறீங்களா... அடிங்க...! ஆனா, நான் வந்து அவளை வரவேற்பேன்னோ அல்லது அவளோடு ஒத்துப் போவேன்னோ நினைக்க வேணாம். முதல்ல வந்தவங்கிற காரணத்தால எப்பவும் மாதிரி நான் பாட்டுக்கு என் வேலையைச் செய்துகிட்டு இருக்கேன். யார் விஷயத்துலயும் நான் தலையிடாதது மாதிரி...வேற யாரும் என் விஷயத்துல தலையிட வேணாம். என் வழிக்கும் வர வேணாம். அவ்வளவுதான்."

"அவ்வளவுதான்னால் சரி... மாடி அறைச் சாவி எங்க இருக்கு?."

"நீங்க எங்க வச்சிட்டுப் போனீங்களோ... அங்கயே இருக்கும்..."

"சரி... ரெயில்ல களைச்சுப் போய் வந்தவங்களுக்கு ஒரு வாய் காப்பி தரக்கூடாதா...?

"உங்களுக்கு மட்டும்னால் தரேன். அது கடமை; ஆனா, அவளுக்கும் சேர்த்து வேணும்னா என்னால் தர முடியாது..."

"வேணாம்... அப்படின்னா எனக்கும் வேணாம். ரெண்டு தம்ளர் தர்றதானால் தா. இல்லாட்டி வெளியே பார்த்துக்கறோம்."

"சரி, பார்த்துக்குங்க!"

"முகம் சற்றே சிவந்து, திரும்பிப் போனான் ராஜாராமன்.

ஒரு விநாடிக்கெல்லாம் வாசல் வராந்தாவில் அவனது குரல் கேட்டது.

"வா கிரிஜா... மாடிக்குப் போகலாம்..."

சற்று தயங்கி சன்னமாய் மென்மையாக வந்தது அவளது குரல்.

"ஏங்க... அக்கா வரலை?"

அக்கா!

இவளுக்குள் மீண்டும் நெருப்பு பற்றிக்கொண்டது.

'அக்காவாம் அக்கா... யாருடி அக்கா? நான் என்ன உன் கூடப் பிறந்தவளா... உனக்கு மூத்தவளா...? எத்தனை தைரியமிருந்தால் என்னை அக்கான்னு சொல்லுவே...?'

அந்த வார்த்தையில் நெருங்கி வந்து, சுலபமாக ஒட்டப் பார்த்து–

கூடாது... அதற்கு இடம் கொடுக்கக்கூடாது... எக்காரணம் கொண்டும் அவளைத் தன்னை நெருங்க விடக்கூடாது. நீ நிற்க வேண்டிய இடம் அதுதான் என்று கோடிழுத்து வரையறுத்து வைக்க வேண்டும். ஆரம்பத்திலேயே தள்ளி நிறுத்திவிட வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம்.'

படுக்கையில் சரிந்தபோது மனதிற்குள் இருந்த இயற்கையான சுபாவம் மெல்லத் தலை தூக்கிற்று. 'அவருக்கு மட்டும் காப்பி கலந்து கொடுத்திருக்கலாமோ...? பாவம், ரெயிலில் வந்த களைப்பில் வாய் திறந்து கேட்டாரே...! வெறும் காப்பிதானே... முன்பின் தெரியாதவர்கள் வந்தால்கூட 'காப்பி' குடிக்கிறீங்களா...?' என்று விசாரிப்போமே...

அந்த மாதிரி அவளுக்கும் கலந்து கொடுத்திருக்கலாம்தான். வெறும் காப்பியில் என்ன வந்துவிடப் போகிறது...? அதில் போய் தன் கோபத்தை அற்பத்தனமாகக் காட்டியிருக்க வேண்டாம். அவள்... அவள் என்ன நினைத்துக்கொண்டு இருப்பாள்...?

'ப்சூ! என்ன நினைத்தால் என்ன? அவள் நினைப்பைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்? நான் என்ன நினைப்பேன் என்றுஅவள் கவலைப்பட்டாளா? என் உணர்ச்சிகளுக்குச் சிறிதேனும் மதிப்புக் கொடுத்தாளா? அவன் போய் கூப்பிட்டதும் கிளம்பி வந்துவிட்டாளே? ஒரு பெரிய சூட்கேஸோடு வந்திறங்க எத்தனை துணிச்சல் வேண்டும்? மனசு எவ்வளவு உரப்பட்டுப் போயிருக்க வேண்டும்...?'

வந்து இறங்கினதும் அல்லாமல் அக்காவாமே... அக்கா...! எத்தனை சுலபமாக சொந்தம் கொண்டாடிவிட்டாள்...

அப்படிப்பட்டவளுக்காகத் தான் ஏன் பச்சாதாபப்பட வேண்டும்? மனமிறங்கிப் போக வேண்டும்...? தான் தரவில்லை என்றால் என்ன...? அவளுக்குக் காப்பி கிடைக்காமல் போய்விடப் போகிறதா...?

காப்பி கொடுக்கவில்லை என்றதும் வெளியில் பார்த்துக்



கொள்வதாக எத்தனை அழுத்தமாய்ச் சொன்னான் அவன். அதில் தொனித்த நெருக்கம், அந்நியோன்னியம்...

ஆறு ஆண்டுகளாக அவனுடன் குடும்பம் நடத்தி என்ன பிரயோஜனம்? அக்கினி வளர்த்து, அருந்ததி பார்த்து, மூன்று முடிச்சுப் போட்டுக் கொண்டு என்ன பலன்...? நிமிடமாய் தன்னை அந்நியமாக்கி– அவளோடு சேர்ந்து 'நாங்கள் வெளிய பார்த்துக்கறோம்...' என்றல்லவா சொல்லிவிட்டான்.

'சரி ராஜி. எனக்கு மட்டும் தர்றதானால்தா... அவளுக்கு நான் வெளியில் வாங்கித் தர்றேன்' என்று சொல்லாமல்– 'அப்ப நாங்க வெளிய பார்த்துக்கறோம்' என்று அவளுடன் கூடச் சேர்ந்து கொண்டு...

இவள் கீழ் உதட்டைக் கடித்து அழுகையை அடக்கிப் படுத்துக் கொண்டிருந்த அரை மணி நேரத்திற்கெல்லாம், வெளியில் மாடிப்படி விளக்கு எரிந்தது. ராஜாராமனும், அவளும் இறங்கி வருவது தெரிந்தது.

அவளை வெளியில் நிற்க வைத்துவிட்டு, அவன் மட்டும் உள்ளே வந்தான்.

"கதவைப் பூட்டிக்க. நாங்க சாப்பிட வெளிய போறோம். வர நேரமாகும்; நாங்க மேல போய்ப் படுத்துக்குவோம். அதனால நீ தூங்கப் போகலாம். எனக்காகக் காத்துட்டிருக்க வேணாம்."

சில விநாடிகளுக்குப் பின் ஸ்கூட்டர் கிளம்பிப் போகிற ஓசை கேட்டது.

எழுந்து கதவைத் தாழிட்டு திரும்பியவளுக்கு துக்கம் குமுறிக் குமுறி வந்தது. 'நீயும் சாப்பிட வர்றியா?' என்று ஒரு வார்த்தை கேட்காதது நெஞ்சைச் சுட்டு நெருப்பாகத் தகிக்க வைத்தது. அதைவிட– 'நாங்க மேல போய்ப் படுத்துக்குவோம். அதனால நீ தூங்கப் போகலாம். எனக்காகக் காத்துட்டிருக்க வேணாம்...' என்றது– இன்னமும் கொடுமையானதாகப்பட்டது. அதன் வெம்மை தாங்காதவளாக, சூடு பொறுக்க முடியாதவளாக கண்களில் இருந்து கண்ணீர் அருவியாக வழிந்து தலையணையை நனைத்தது. வெகுநேரம் விசும்பினவள், பின்னர் அவளையும்

அறியாமல் தூங்கிப் போனாள்...

நடுராத்திரியில் திடீரென்று விழிப்பு வந்ததும் பசியும், தாகமு நெஞ்சை வரட்டிற்று. சாப்பிடாமல் படுத்துக்கொண்ட நினைவிற்கு வந்தது. ராஜாராமனும், அவளும் சாப்பி வெளியில் கிளம்பிப்போன பின்பு இவள் சாப்பிடவில்லை. அ வருத்தத்திலும், சோகத்திலும் அப்படியே படுத்துவிட்டாள்.

இப்போது பசித்தது. தாகமாக இருந்தது.

எழுந்து விளக்கைப் போட்டு மணி பார்த்தாள். பன்னிரண் பத்தாகி இருந்தது. சமையலறைக்குப் போய் ரெண்டு தம்ள தண்ணீர் ஊற்றிக் குடித்துவிட்டு, வெளியில் வந்தபோ 'அவர்கள் இருவரும் வந்துவிட்டார்களா?' என்று பார்க் ஆர்வம் தோன்றியது. வராந்தா விளக்கைப் போட்டு வெளிவாச கதவைத் திறந்து எட்டிப் பார்த்தபோது, மாடி அறையில் விளக் எரிந்துகொண்டிருப்பது ஜன்னல்களின் திரைச் சீலையையும் மீ வெளியில் தெரிந்தது.

'பன்னிரண்டு மணிக்கு மேலும் விளக்கைப் போட்டுக்கொண் என்ன செய்கிறார்கள்...?'

'ஒருவேளை பேசிக்கொண்டு இருக்கிறார்களோ... இல்லாவிட்டால்... இல்லாவிட்டால்... வெளிச்சத்தில் முத நாள் ராத்திரியை அனுபவிக்கிறார்களோ...? முதல் ராத்திரி என் சொல்ல அவன், அவளைக் கல்யாணம் பண்ணித்தான் அழைத் வந்திருக்கிறானா...? ஆட்டோவில் இருந்து இறங்கும்போது அவ கழுத்தில் தாலிக்கயிறு தெரிந்ததா...?

பார்க்கவில்லை இவள்!

பார்வைக்கு அவள் முகம் மட்டும் 'பளிச்'சென்று கண்களி பட்டதே தவிர, வேறுஎதுவும் தெரியவில்லை. அந்த முகலட்சண இவளது கவனத்தை முழுமையாக இழுத்துவிட்டது. அந்த நிறமு அழகும் இவளை ஒரு விநாடி அடித்துத்தான் போட்டுவிட்ட அதில் கவரப்பட்டவளாக நின்றிருந்தாளே தவிர, மற்ற எதையு கவனிக்கவில்லை.

அவள் கல்யாணம் பண்ணி– கழுத்தில் தாலி கட்டிக்கொண்



வந்தால் என்ன... இல்லாமல் வெறுமனே வாழ்க்கை நடத்த வந்தவளானால் என்ன...? எல்லாம் ஒன்றுதான்! எப்படியோ வந்து சேர்ந்துவிட்டாள்– இவளது கணவன் மட்டுமின்றி வீடு, வாழ்க்கை எல்லாவற்றிலும் பங்கு பெறும் தகுதி பெற்றவளாக சேர்ந்து கொண்டுவிட்டாள்.

'இனி நீ எனக்குத் தேவையில்லை' என்கிற மாதிரி அவனும்– அவளுடனே படுக்கப் போய்விட்டான். இனி எல்லா ராத்திரிகளும் அவளுடன்தான் படுப்பான். இவள் இப்படித் தனியாய், மாடியறையில் 'அவர்கள் என்ன செய்வார்கள்?' என்ற யோசனையுடன், அந்தத் தனிமையைப் பொறுத்துக்கொள்ள மாட்டாதவளாக– படுத்துப் படுக்கையின் வெறுமை உறுத்தலாய் தெரிய, முன்பு அவனுடன் ஒன்றாகக் கழித்த இரவுகளை எண்ணி வெந்து வெந்து தணிய வேண்டியதுதான்...!

விளக்கை அணைத்து– வாசல் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு உள்ளே வந்து படுத்தபோது– உடம்பு அனலாகக் கொதிக்கிற மாதிரி இருந்தது. கண்கள் எரிந்தன. படுக்கை தகித்தது.

இவள் கண்களை மூடி 'முருகா...முருகா' என்று முனகியதோடு, மனசு அமைதி பெற கந்தசஷ்டி கவசம் சொல்ல ஆரம்பித்தாள்.

## 4

'புஸ்... புஸ்' என்று குக்கர் சத்தம் கேட்டதும்– சடாரென்று விழிப்பு வந்தது. ஜன்னல் வழியாகப் பளிச்சிட்ட வெயில் அதிக நேரமாகிவிட்டதைத் தெரிவிக்க– கண், கடிகாரத்திற்குப் போயிற்று.

ஏழு இருபது.

சரேலென்று படுக்கையைவிட்டுக் கீழே இறங்கினாள் இவள். அத்தனை நேரம் தூங்கிவிட்ட பதற்றத்துடனும், பரபரப்புமாக

சமையலறைக்குள் நுழையப் போனவள் சட்டென்று நின்றாள்.

உள்ளே இருந்து வந்த குக்கர் சத்தம், ஆள் நடமாட்ட அரவம், வாணலியில் பருப்பு வறுபடுகிற வாசனை ஆகியவற்றை உணர்ந்தாள்.

யாரோ சமையல் செய்கிறார்கள்!

யாராக இருக்கும்?

நிச்சயம் ராஜாராமனாக இருக்க முடியாது. அவனுக்கு சமைக்கத் தெரியாது. 'கியாஸ்' அடுப்பைப் பற்ற வைக்கக்கூட வ்ராது.

அப்படி இருக்க குக்கர் வைக்கப்பட்டு, வாணலியில் பருப்பு வறுக்கப்பட்டு...

யாராக இருக்கும்?

அவள்...!

அவளாகத்தான் இருக்க வேண்டும். தான் தூங்கிப் போனதை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, கீழே இறங்கி வந்து சமையலறைக்குள் நுழைந்து, குக்கர் வைத்து சமைக்க ஆரம்பிக்கிறாள் என்றால்...

இந்த வீட்டில் தன் உரிமையை நிலைநாட்டத் தொடங்கி இருக்கிறாள் என்றுதான் அர்த்தம்.

'உனக்குள்ள அதிகாரம் எனக்கும் உள்ளது. நீ செய்கிற வேலைகளைச் செய்யக் கூடிய தகுதி எனக்கும் உண்டு' என்பதைச் சொல்லாமல் செய்து காட்டுகிற சாமர்த்தியம்...

இந்த விதமான எந்த சாமர்த்தியமும் அற்ற தன் இயலாமையையும், அதன் காரணமாக அவன் எடுத்துக்கொண்ட அத்துமீறல்களையும் நினைத்து அந்த நேரத்தில் ஏற்பட்ட கோபத்தையும், வெறுப்பையும் அடக்கிக்கொள்ளும் பொருட்டு சமையற்கட்டில் நுழைவதைத் தவிர்த்து– குளியல் அறைக்குள் நுழைந்து கதவை மூடித் தாழிட்டுக் கொண்டாள். நெஞ்சின் தகிப்பு அடங்குகிற விதமாகக் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவிப் பல் தேய்த்து, புடவைத் தலைப்பால் துடைத்தபடி வெளியில் வந்தபோது –



அவள் கண்ணில்பட்டாள்.

காலையில் எழுந்து தலைக்குக் குளித்து நீண்டு அடர்ந்த கேசத்தின் நுனியில் முடிச்சிட்டு நெற்றிப் பொட்டும், அதற்கு மேல் கீற்றாக விபூதியும், பளீரென்ற சிரிப்புமாக –

அவள்தான் அந்த வீட்டுக்கு எஜமானி போல்...

அவளேதான் அவன் மனைவி போல்– பவ்வியமான குடும்பத் தலைவி போல்– எத்தனையோ காலமாக அங்கு சமைத்துக்கொண்டிருக்கிற பாந்தத்துடன்–

முதல் முறையாக அவளை நேருக்கு நேர் மிக நன்றாக இவள் பார்த்த அதே தருணத்தில் இயல்பாய், சிநேகமாய் புன்னகைத்துச் சொன்னாள் அவள்.

"வாங்கக்கா... சூடா காப்பி கலந்து தரேன்..."

இவளுக்குச் சுரீரென்றது.

நேற்று சாயந்திரம் அவளுக்குக் காப்பி தர மறுத்ததைச் சுட்டிக் காட்டுவதாக இருந்தது. இந்த விதமாகப் பழி தீர்த்துக்கொள்கிற மாதிரி– தன்னை அவமானப்படுத்துகிற மாதிரி– எந்த விதத்திலும் தான் உயர்ந்தவள் என்று காட்டிக்கொள்வது போன்று அது இருந்தது.

அந்த பளிச்சிட்ட சிரிப்பு, சிநேகமான அழைப்பு...

"வாங்கக்கா... சூடா காப்பி கலந்து தரேன்..."

இவள் சிறுத்துப் போய், அவமானத்தால் முகம் சிவந்து போக– தன்னால் நிலைமைகளைப் பக்குவமாக அணுக முடியாத திறமையற்றதனத்தினால் ஏற்பட்ட கோபத்துடன் சுள்ளென்று அவளை ஏறிட்டுச் சொன்னாள்.

"இதப் பாரு... இந்த அக்கா சொக்கா என்றெல்லாம் கூப்பிடற வேலையை வச்சுக்காதே! அக்கா– தங்கச்சி உறவெல்லாம் வேணாம், எனக்குப் பிடிக்காது."

வார்த்தைகள் நெருப்புப் பொறிகள் மாதிரி சிடுசிடுவென்று தெறித்தபோதிலும், அவள் முகம் மாறவில்லை. உதட்டுப் புன்னகை சுருங்கவில்லை.

அதற்கும் அதே புன்னகையோடு– இயல்பான குரலில் பதி வந்தது.

"சரி, உங்களுக்குப் பிடிக்கலைன்னால் அக்கான்னு கூப்பிட வேற எப்படிக் கூப்பிடணும்னு சொல்லுங்க... அப்படி கூப்பிடறேன்..."

"நீ என்னைக் கூப்பிடவே வேணாம்..."

முகத்தில் அறைகிற அந்தப் பதிலில் சற்று தயங்கி– ஒ விநாடியில் சமாளித்துக்கொண்டு மீண்டும் பேசினாள் அவ

"நீங்க என்னைக் கூப்பிடணும்னால்... என் பேர் கிரிஜா...

"அதற்கும் தேவை இருக்காது. ஏற்படாதுன் நினைக்கிறேன்..."

"ஒருவேளை ஏற்பட்டதுன்னால் கூப்பிட சவுகர்யமா இருக்கும்னுதான் பேரைச் சொன்னேன்."

"நான்தான் ஏற்கெனவே வேணாம்னு சொல்லிட்டே அப்புறம் எதுக்கு அநாவசிய பேச்சு...?"

"சரி, இந்தாங்க. காப்பி சாப்பிடுங்க..."

"வேணாம். பிடிக்கலை..."

"நம்ம மாதிரி யாருக்காவது காலையில காப்பி பிடிக்காம இருக்குமா...; சும்மா சாப்பிடுங்க..."

"பிடிக்கலைன்னு தமிழ்ல தெளிவா– புரியும்படிதா சொன்னேன்...?"

"ஏன் பிடிக்கலை? நான் போட்டதாலா...?"

"தெரியல... அப்புறம் என்ன கேள்வி..."

"சமையல்கூட நான்தான் செய்திருக்கேன். அதனால சாப்பிட போறதில்லையா...?

"எனக்குக் கை இருக்கு, சாதம் வடிச்சுக்கிற சக்தி இருக் ராத்திரி உறை ஊத்தின தயிர் இருக்கு, சாப்பிட்டுக்குவேன்."

பட்டுக் கத்தரித்தது போன்ற பதிலில் அவள் அப்படி அடிபட்ட மாதிரி நின்றாள்.

இவள் உள்ளுக்குள் ஓரளவு அடங்கிய கோபத்துட



விருட்டென்று படுக்கை அறைக்கு வந்துவிட்டாள்.

அதன்பின்னர் வெளியில் போகவில்லை. காப்பி குடிக்கவில்லை. பசியில் வயிறு சங்கடப்படுத்தியது. ஆனாலும், சமையல் அறைக்குப் போகக் கூடாது என்கிற பிடிவாதத்தில் அவள் இருந்ததால், அப்படியே கட்டிலில் முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

கடிகாரத்தில் ஒன்பது முறை மணி அடிப்பது காதில் விழுந்தது. சமையலறையில் அவள் குரலோடு இப்போது அவன் குரலும் சேர்ந்துகொண்டது. அடுத்த அரை மணிக்கெல்லாம் இருவரும் மாடிக்குச் சென்று, சிறிது நேரத்திற்கெல்லாம் இறங்கி வருகிற சப்தம் கேட்டது.

இப்போது அவன் மட்டும் உள்ளே வந்து சொன்னான்.

"நாங்க ஆபீசுக்குப் போறோம். கிரிஜா உனக்கும் சேர்த்து சமைச்சு வச்சிருக்கா, பிடிச்சா சாப்பிடலாம். இல்லைன்னால் வேற சமைச்சுக்க. வர்றோம். கதவைப் பூட்டிக்க..."

வாசலில் ஸ்கூட்டர் கிளம்புகிற சத்தம் கேட்க– இவள் ஒரு விநாடி பேசாமல் உட்கார்ந்து– இலக்கின்றி எதையோ வெறித்துப் பார்த்துவிட்டு, பின்னர் மெல்ல எழுந்து உள்ளே போய் அடுப்பைப் பற்ற வைத்து காப்பி போடத் தொடங்கினாள்.

## 5

அழைப்பு மணி அழுத்தப்படாமல், விரல் முட்டியால் மிகச் சன்னமாக வாசல் கதவு தட்டப்படுகிற சத்தம் கேட்டது. படித்துக்கொண்டிருந்த பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு, எழுந்து வந்து கதவைத் திறந்து பார்த்தாள் ராஜி.

கிரிஜா நின்றுகொண்டிருந்தாள். முகத்தில் அசாத்திய களைப்பு தெரிந்தது. உடம்பு சோர்ந்து போய் காணப்பட்டது. ஆனாலும், உதட்டில் சிநேக பாவனையில் ஒரு புன்னகை.

"என்னக்கா... எப்படி இவ பகல் மூணு மணிக்கெல்லாம் வந்து

நிக்கறாள்னு யோசிக்கிறீங்களா...?"

உள்ளே போகத் திரும்பிய ராஜி- சடாரென்று நின்று தலையைத் திருப்பி, அவளைச் சுரீரென்று பார்த்தாள்.

"என்னை அக்கான்னு கூப்பிட வேணாம்னு காலையிலயே தெரியப்படுத்தினதாக ஞாபகம்."

"எனக்கும் ஞாபகம் இருக்கு, ஆனால், வேற எப்படிக் கூப்பிடறதுன்னு தெரியலை. பேர் சொல்லிக் கூப்பிடவும் தயக்கமா இருக்கு..."

"அது சரி, பேர் சொல்லிக் கூப்பிடத் தயங்கற தயக்கம் மற்ற எதுக்கும் வரக் காணோமே...? பெரிய காரியமெல்லாம் செய்தபோது தயங்கினதாகத் தெரியலையே!"

அதைக் கேட்டுத் தலை குனிந்தாள் கிரிஜா.

சில விநாடிகள் மவுனமாகவே தரையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். பின்னர் பார்வையை உயர்த்தியபோது கண் ஓரங்களில் நீர் கட்டிக்கொண்டு நின்றிருந்தது.

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்னுதான் ஆபீசில் சேர்ந்த முதல் நாளே 'பர்மிஷன்' கேட்டுட்டு வந்திருக்கேன்."

"என்கிட்டயா... அவர் கிட்டயா?"

"உங்ககிட்டேதான்..."

"பேசறதுக்கு என்ன இருக்கு, எங்கிட்ட...?"

"எல்லாத்தையும் மனசுவிட்டு உங்ககிட்ட கொட்டணும் போல இருக்கு. எனக்கு அம்மா இல்லை. கூடப் பிறந்தவங்க இல்லை. அப்பா, வேற கல்யாணம் பண்ணிக்கிட்டாரு. அது பிடிக்கலை. அதனால் அப்பாவுக்கும், எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லைன்னு ஒரு விடுதியில சேர்ந்துட்டேன்..."

அதைக் கேட்ட ராஜியின் உதட்டில் மகா கேலியான சிரிப்பு வெளிப்பட்டது. அவளை மிக மிக அலட்சியமாய்ப் பார்த்துக் கேட்டாள்.

"அப்பா ரெண்டாம் கல்யாணம் செய்துக்கிட்டது பிடிக்கலைன்னு விடுதியில தங்கினவதான், ரெண்டாம் தாரமா இங்க வந்திருக்கே இல்ல...?"

"............"

"அப்பா ரெண்டாம் கல்யாணம் செய்துக்கிட்டதே பிடிக்கலை. ஆனால் வீட்டுக்காரர், அக்கினி சாட்சியா தாலி கட்டினவர்- ரெண்டாம் தாரமா இன்னொருத்தியைக் கூட்டிக்கிட்டு வருவாரு. அதை நான் ஏத்துக்கணும்னு எதிர்பார்க்கிறது மட்டும் எப்படி...?"

அவ்வளவுதான்! அந்த ஒரு கேள்வியில் சுருண்டு போனாள் அவள். ஓங்கி பளீரென்று கன்னத்தில் அறை வாங்கினவளாகத் துடித்துப் போனாள். கண்களில் இருந்து கண்ணீர் பெருகி வழிய- பரிதாபமாக ராஜியை ஏறிட்டாள்.

"ரெண்டாம் தாரம்னு தெரிந்திருந்தால், நான் இந்தக் காரியத்தை செய்திருக்கவே மாட்டேன்...?"

"அப்படி... ன்னா..."

"அவர் ஏற்கெனவே கல்யாணம் செய்துக்கிட்டவருங்கிற விஷயமே எனக்கு முதல்ல தெரியாது. அவர் எங்க ஆபீசுக்கு வர ஆரம்பிச்சு... நாங்க பழகத் தொடங்கி... அந்தப் பழக்கம் காதலா மாறி... அவரில்லாமல் நானில்லைன்னு ஆன அந்த நிமிஷம் வரை தெரியாது."

"ஓஹோ... அப்படியா...! அப்புறம் எப்ப தெரிஞ்சதுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?"

"இப்பத்தான் தெரிஞ்சது. கொஞ்ச நாளைக்கு முன்னாலதான்..."

"கொஞ்ச நாளைக்கு முன்னாலன்னால்...? 'நீங்க இல்லாமல் என்னால் இருக்கவே முடியலை. உடனே வந்து என்னை கூட்டிட்டுப் போங்க. இல்லாட்டி பெட்டி- படுக்கையைத் தூக்கிட்டு நான் அங்க வந்துடுவேன்'னு கொஞ்சம் பயமுறுத்தலா உருகி, உருகி எழுதினயே... அதுக்கு முன்னால தெரிஞ்சுதா, அப்புறமா...?"

"அப்புறம்தான்..."

"அப்ப... இப்போதான் கொஞ்ச நாளைக்கு முன்னால

தெரிஞ்சிருக்கணும்..."

"ஆமா."

"எப்படித் தெரிஞ்சது..."

"அவரேதான் சொன்னார்..."

"நீங்க ரெண்டு பேரும் பழக ஆரம்பிச்சு எத்தனை நாளாச்சு...?"

"சுமார் ஒரு வருஷம் இருக்கும்..."

"இந்த ஒரு வருஷமா சொல்லாமல் மறைச்சவர், திடீர்னு அப்போ மட்டும் எப்படிச் சொன்னார்?"

"நான் கல்யாணம் செய்துக்கச் சொல்லியும், கூடவே சென்னைக்கு அழைச்சிட்டுப் போகச் சொல்லியும் பிடிவாதம் பிடிச்சதால் வேற வழியில்லாமல் தனக்கு ஏற்கெனவே கல்யாணமான விஷயத்தையும், உங்களைப் பற்றியும் சொன்னார்..."

"என்னன்னு சொன்னார்...?"

"ராஜி ரொம்ப நல்லவ; என் மேல் உயிரையே வச்சிட்டிருப்பவள் அவளை தவிக்க விட்டுட முடியாதுன்னார்."

"அப்புறம்...?"

"அப்புறம் என்ன...? அதைக் கேட்டு எனக்குக் கோபம் வந்தது. ஆத்திரம் வந்தது. ஏமாற்றப்பட்டுவிட்ட துக்கம் வந்தது. எல்லாத்துக்கும் மேலா... உங்களை கைவிட முடியாதுன்னு சொன்னதில் எரிச்சல் வந்தது..."

"சரி... என்ன செய்தே...?"

"என்ன செய்ய முடியும்...? அந்த நிலைமையில என்ன செய்ய முடியும் சொல்லுங்க...?"

"ஏன்... ஏற்கெனவே கல்யாணமானவர், முதல் சம்சாரத்தை விட முடியாதவருங்கறது தெரிஞ்சப்புறம் கவுரவமாக விலகிப் போய் இருக்கலாமில்ல...? வேற நல்ல இடத்துல, கல்யாணம் ஆகாதவனா பார்த்து கல்யாணம் செய்து இருக்கலாமில்ல...?"

அதைக் கேட்டு அவள் வருத்தமும், வேதனையும் பீறிட சொன்னாள்.



"அது அத்தனை சுலபமில்லை..."

"ஏன் சுலபமில்ல...?"

"ஏன்னால்... எனக்கு அப்பவே நாலு மாசமாயிடுச்சு..."

"என்ன...?"

"ஆமாம், இது அஞ்சாவது மாசம். இப்ப சொல்லுங்க, நான் உங்க வாழ்க்கையைப் பாழாக்கணும்னோ... உங்களுக்குத் துரோகமாகவோ ஏதாவது செய்திருக்கேனா...? என் மேல் ஏதாவது தப்பு இருக்கா?"

"இருக்கு! நிச்சயமா தப்பு உன் மேலதான்..."

ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை-600 007.

"என்ன...?"

"ஆமா, யோசிக்காம- முன்னபின்ன விசாரிக்காம ஒரு ஆம்பிளை யார்- எப்படிப்பட்டவன்னு தெரிஞ்சுக்காம... நல்லா, நிறமா, அழகா இருக்காருங்கறதுக்காக ஆசைப்பட்டது முதல் தப்பு. ரெண்டாவது தப்பு... கல்யாணத்துக்கு முன்னால..."

"போதும் நிறுத்துங்க... நானே ரொம்ப நொந்து போய் இருக்கேன், மனசு நிம்மதியற்று இருக்கேன். தயவு செய்து அந்தத் தப்பு எல்லாத்தையும் மறந்து, மன்னிச்சு என்னை ஏத்துக்கங்க, எனக்கு உங்களை விட்டால் வேற யாருமே கிடையாது.

இப்படி கல்யாணம் செய்துக்கிட்டதால், அப்பா என் முகத்துல கூட விழிக்கமாட்டார். வீட்டு வாசல்படி ஏறவிடமாட்டார். இந்த நிலையில என்னை வெறுக்காதீங்க. நீங்க மட்டுமல்ல, ஒரு வகையில் பார்த்தால் நான் கூட ஏமாற்றப்பட்டவள்தான்..."

சொல்லிவிட்டு- முகத்தை மூடிக்கொண்டு அவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள். சிறிது நேரம் அழுது ஓயட்டும் என்று

பேசாமல் இருந்த ராஜி– பின்னர் குரலில் பழைய கடுகடுப்பும், வெறுப்பும் குறைய– ஆனால் கம்பீரம் சிறிதும் குறையாதவளாகச் சொன்னாள்.

"சரி... நடந்தது நடந்துடுச்சு. இனி அழுது என்ன செய்யப் போற? எழுந்து முகத்தைக் கழுவிக்கிட்டு வா... காப்பி போடறேன், குடிக்கலாம்."

## 6

ஒரு வாரமாக இல்லாமல் அன்று தூக்கம் கண்ணை வெகுவாக சொக்கியது. கிரிஜாவும், ராஜாராமனும் மேலே போன பின்– இவள், வாசல் கதவைத் தாழிட்டுக்கொண்டு வந்து படுத்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அடித்துப் போட்ட மாதிரி தூங்கிப் போனாள்.

ஒரு வாரத் தூக்கத்தை ஈடு செய்கிற தூக்கம். நடுராத்திரியில் வாசல்கதவு சன்னமாகத் தட்டப்படுகிற சத்தம் கேட்டது.

"ராஜி... ராஜி..." என்ற குரல் அவளை எழுப்பியது.

சடாரென்று விழிப்பு வந்தது.

எழுந்து முன் அறைக்கு வந்து விளக்கைப் போட்டுவிட்டுக் கேட்டாள்.

"யார் அது...?"

"நான்தான் ராஜி, கதவைத் திற..."

ராஜாராமனின் குரல்.

'எதற்காக... இந்த ராத்திரி நேரத்தில் வந்து கதவைத் தட்டுகிறான்? ஒருவேளை குடிக்கத் தண்ணீர் தேவையாக இருக்குமோ...? அவள் எடுத்துப் போக மறந்துவிட்டாளோ...? இல்லையே! போகிறபோது தண்ணீர் கொண்டு சென்றாளே, வேறு ஏதாவது வேண்டுமோ என்னவோ...?'

இவள் கதவைத் திறந்து சன்னமான குரலில் "என்ன?" என்று



கேட்டதும்...

அவன், முகத்தில் ஒரு சிரிப்பு படர சொன்னான்.

"வழி விடு ராஜி. இப்படி வாசல்லயே நிற்க வச்சு கேட்டால் எப்படி....?"

அவள் திரும்பி தன் அறைக்குப் போக நகர்ந்தபோது, அவன் வாசல் கதவை மூடித் தாழிடுவது கேட்டது. இவள் பின்னாலயே படுக்கை அறைக்குள்ளும் நுழைந்தான். இவளுக்கு புரிந்தது.

குபீரென்று உடம்பில் தீப்பற்றின மாதிரி உஷ்ணம் பரவியது. நெஞ்சில் உப்புக்கரிப்பாக இறங்கிற்று. கண்களில் கனல் தெரிய அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"எதுக்கு இப்போ இங்க வர்றீங்க...?

"இது என்ன கேள்வி ராஜி...? பாதி ராத்திரியில எழுந்து பொண்டாட்டிகிட்ட எதுக்கு வருவாங்க...?"

"ஏன் அந்தப் பொண்டாட்டி மாட்டேன்னு சொல்லிட்டாளோ...?"

"அவ என் விருப்பத்துக்கு மாறா ஒருபோதும் நடக்கமாட்டாள்; நான் என்ன சொன்னாலும் சரின்னு சொல்லுவாள்..."

"அப்படிப்பட்டவ இன்னிக்கு ஒத்துக்கலையாக்கும்...?"

"யாரு ஒத்துக்கலைன்னு சொன்னது...? அவ ஒத்துக்கிட்டு, நாங்க சந்தோஷமா இருந்து மூணு மணி நேரத்துக்கு மேல் ஆயிடுச்சு. இப்ப அவ நல்லா அசந்து தூங்கறா. எழுப்ப வேணாம்னு உன்கிட்ட வந்தேன். உன்கிட்ட 'வந்து' எத்தனை நாளாச்சு ராஜி. கிட்டத்தட்ட பதினைந்து, இருபது நாள் இருக்குமா?"

"த்தூ..!" என்றாள் இவள், ஆக்ரோஷமாக.

"என்ன மனுஷன் நீங்க...? மனுஷனா, மிருகமான்னு சந்தேகம் வருது. மிருகங்ககூட உங்களை மாதிரி அலையாது. ஒரே ராத்திரியில் ரெண்டு பேர்னு தேடிட்டுப் போகாது. வெட்கம், மானம் எதுவுமே கிடையாதா உங்களுக்குன்னு நான் கேட்கப் போறதில்லை. ஏன்னால்... உங்களைப் பார்த்து அப்படிக்

கேட்டால் வெட்கமும், மானமும் என் மேல் மானநஷ்ட வழக்குப் போடும்.

எந்தவிதக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காத மகா கேவலமான ஜென்மம் நீங்க. உங்களைப் பார்க்கவே நான் வெறுக்கறேன். உங்கக்கூட எந்தவித உறவும் வச்சுக்க நான் தயாரில்லை. உங்க மனைவின்னு சொல்லிக்கிறதையே பெரிய பாவமா நினைக்கிறேன். வேறு எந்தவித வழியும் தெரியாததால் திரும்பி மாமாகிட்ட போய் நிற்க இஷ்டப்படாததால்தான் இங்க இருக்கேனே தவிர, வேற எதுக்கும் இல்லை.

தயவு செய்து இந்த மாதிரி 'இழே' இறங்கி வந்து என்னை அவமானப்படுத்த வேண்டாம். இனி எந்த விதமாகவும் நான் அவமானப்பட தயாராயில்லை. நீங்களும் அவமானப்பட வேண்டாம்னு நினைச்சால், தயவு செய்து இப்ப இறங்கி வந்த மாதிரி சந்தடி செய்யாமல் மேலே ஏறிப் போயிடுங்க..."

அவன் ஒரு விநாடி அதிர்ந்து போய்– ஸ்தம்பித்து நின்றான்.

இவள் இத்தனை ஆக்ரோஷமாகப் பேசுவாள் என்று எதிர்பார்க்கவில்லை, இவளுக்கு இவ்வாறெல்லாம் பேச வரும் என்று நினைக்கவில்லை.

முதல் முறையாக அந்தப் பேச்சில், தன்னை துச்சமாக்கிய இவளது பார்வையில் ஓர் அவமான உணர்ச்சி ஏற்பட்டது. வைராக்கிய உணர்வு வந்தது. குரலில் உறுதி வெளிப்பட அழுத்தமாய் வார்த்தை வார்த்தையாய் நிதானமாகச் சொன்னான்.

"ராஜி! இனிமே உன்னைத் தொடமாட்டேன். நீ இருக்கிற பக்கம் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டேன். இது சத்தியம்."

சொல்லிவிட்டு மீண்டும் பரபரவென்று படியேறி மேலே போன பின்– இவள் ஒருவித குழப்பமான மனநிலையில் தவித்தாள்.

தான் அப்படிச் செய்தது சரியா, தவறா என்பது புரியாமல் கதவைத் தாழிட்டு, படுக்கையில் படுத்தபோது மனம் அமைதியின்றி புயல் கால ராத்திரியின் கடலைப் போல் கொந்தளித்தது...



# 7

**வீ**டு வெறும் பொம்மலாட்டக் காட்சியாக மாறி வெகு நாட்கள் ஆகிவிட்டதாக உணர்ந்தாள் ராஜி. எங்கிருந்தோ... யாரோ கயிறு கட்டி இயக்குவது போன்று நினைத்தாள்.

நீர் வற்றிய குளமாக– சந்தோஷம், சிரிப்பு, கலகலப்பு எல்லாம் வற்றிப் போயிருப்பது தெரிந்தது. தனக்காவது அப்படி இருக்கக் காரணம் இருந்தது. ஆனால், கிரிஜாவும் அப்படி இருந்தது மனதை நெருடியது.

அந்த முகத்தில் சிரிப்பைப் பார்த்து மாதக் கணக்காகிவிட்டது ஞாபகத்திற்கு வந்தது.

இந்த வீட்டிற்கு வந்த புதிதில் ஒரு நாள் பிற்பகல் சீக்கிரம் அலுவலகத்தில் இருந்து திரும்பி வந்து தன்னிடம் பேசிய பின் அவளும் கூட வெகுவாக மாறித்தான் போயிருந்தாள். அவசியமற்ற பேச்சுகளைக் குறைத்திருந்தாள். அவசியமானாலும் கூட ஒரே வார்த்தையில் பதில் சொல்லக் கற்றிருந்தாள்.

ஆபீசுக்கு அவன் பின்னால் ஸ்கூட்டரில் உட்கார்ந்து போவது தவிர, மற்றபடி வெளியில் போவதைத் தவிர்த்திருந்தாள். அத்தனை ஆசையாய் காதலித்துக் கல்யாணம் செய்துகொண்டு, தற்போது அதற்கெல்லாம் நேர்மாறாக ஒவ்வொரு நிமிடமும் வருத்தப்படுகிறவளாகத் தெரிந்தாள்.

இதுபற்றி இவள் ஒரு நாள் கிரிஜாவிடம் கேட்டாள்...

"ஏன் என்னவோ மாதிரி இருக்கே...?"

எங்கோ வெறித்துக்கொண்டு உட்கார்ந்து இருந்தவளிடம் இருந்து உடனே பதில் வரவில்லை. இவளும் விடுபவளாக இல்லை. இன்னும் சற்று குரலை உயர்த்திக் கேட்டாள்.

"கேட்டது காதுல விழலை...?"

"விழுந்தது..."

"பின்ன... பதில் சொல்றதுக்கென்ன...?"

அவளிடம் இருந்து ஒரு ஆழமான பெருமூச்சு வெளிப்பட்டது.

"என்ன பதில் சொல்றதுன்னு புரியலை..."

"அப்படின்னா நிறைய பதில் இருக்கோ...?"

"சில சமயம் நிறைய இருக்கிற மாதிரியும், சில சமயம் ஒண்ணுமே இல்லாத மாதிரியும் தோணுது. எதுவுமே பிடிக்கலை. உடம்பாலயும் முடியலை..."

"முடியலைன்னா படுத்துக்கறது..."

"ப்சூ! அது எப்படி முடியும்? ஆபீஸ் வேலையில்ல...?"

"அப்படி உடம்புக்கு முடியாதப்போ ஆபீசுக்கு எதுக்குப் போகணும்...? விட்டுடறது...?"

"விட்டுடலாம், சுலபம்தான். ஒரு கால் கடுதாசி எழுதிக் கொடுத்திட்டு வந்துடலாம். அதுக்கப்புறம் என்ன செய்யறது...? செலவுக்கு எங்க போய் நிக்கறது...?"

"வேறங்க போய் நிக்கணும்...? யாரை நம்பி வந்தியோ, அவரைக் கேட்கறது..."

"ம் ஹும், என்னை அவர் காப்பாத்துவார்னு நான் வரலை. என் செலவை எல்லாம் பார்த்துக்குவார்னோ, உட்கார வச்சு சாப்பாடு போடுவார்னோ எதிர்பார்க்கலை. இனிமேலும் எதிர்பார்க்க மாட்டேன். என் கை சம்பாத்தியம் இல்லாமல் போனால், இன்னும் கேவலமானவளா ஆகிப் போவேன். அதனால் வேலையை விடுற தப்பான காரியத்தை மட்டும் ஒரு போதும் செய்யமாட்டேன்..."

"ஏன், நான் இல்ல... சம்பாதிக்கிறேனா, என்ன...?"

"உங்க விஷயம் வேற! ஆரம்பத்துல இருந்தே நீங்க சம்பாதிக்கணும்னு வாசப்படி இறங்கலை. அந்த அவசியம் ஏற்படலை. ஆனால், நான் அப்படியில்லை! உங்க விஷயத்துல எல்லார் அனுதாபமும் இருக்கும். எனக்காக அனுதாபப்படவோ, மனசு இரங்கவோ யாரும் இருக்கமாட்டாங்க. குற்றம் செய்தவளைப் பார்க்கிற மாதிரித்தான் என்னைப் பார்ப்பாங்க.



"இது குற்றமோ, இல்லையோ... எனக்கு தெரியலை. ஆனால், நீ ஒரு இடறல் இடறினது நிஜம்தானே...?"

"......... அதுக்குத்தான் கஷ்டப்படறேனே..."

"நீ மட்டுமா படறே...?"

"எல்லாரும் படறோம். சாதாரணமாக இருந்த வீடு... இப்ப இப்படி கலகலப்பு இல்லாம போயிடுச்சேன்னு வருத்தமா இருக்கு. அது என்னாலதான்னு நினைக்கிறபோது, இன்னும் கஷ்டமா தெரியுது..."

"சரி, நடந்ததை நினைச்சு இன்னும் எத்தனை நாள் கஷ்டப்பட்டுட்டு இருக்கப்போற...? இனிமே ஆக வேண்டியதைப் பாரு. இப்படி மனசைப் போட்டு குழப்பிக்கிட்டா, பிறக்கப்போற குழந்தைக்கு ஆகாது..."

"ஆமா... இப்ப குழந்தை இல்லேன்னு யாரு அழுதாங்க...?"

"இதப் பாரு... நீ உன்னைத் திட்டிக்க வேணாம்னு சொல்லலை. உன் வீட்டுக்காரரைத் திட்டு. வேணாம்னு சொல்லல. ஆனா, குழந்தையை ஏதாவது சொன்னே... எனக்குக் கெட்ட கோபம் வரும் ஜாக்கிரதை."

"சரி, சொல்லலை..."

ஒரு விநாடிக்குப் பின் இவளே கேட்டாள்.

"இது எத்தினாவது மாசம்...?"

"எட்டுன்னு நினைக்கிறேன்..."

"நினைக்கிறியா...? உனக்கே கணக்குத் தெரியலையா...?"

"எட்டுதான்."

"ஒழுங்கா டாக்டர்கிட்ட 'செக் அப்' செய்துக்கறியா...?

"ம்..."

"எந்த டாக்டர்...?"

"டாக்டர் கல்யாணி..."

"இங்க பக்கத்துல 'கிளினிக்' வச்சிருக்காங்களே... அவங்களா...?"

"ம்."

"என்ன சொல்றாங்க...?"

"சொல்ல என்ன இருக்கு...?"

"மாசா மாசம் 'டெஸ்ட்' பண்ணுறாங்க. 'பி.பி.' பார்க்கறாங்க. வைட்டமின் மாத்திரை எழுதித் தர்றாங்க..."

"ஒழுங்கா சாப்பிடறியா...?"

"ம்..."

"அடுத்தவாட்டி டாக்டர்கிட்ட போறப்ப நான் வரட்டா...?"

"நிஜமாவா கேட்கறீங்க...?"

"பொய்யா கேட்கிற வழக்கமெல்லாம் என்கிட்ட இல்லை."

"வாங்க..."

"அவரு வருவார்னா நான் வரலை..."

"எவரும் வர்றதில்லை. நானேதான் போறேன். நீங்க வந்தால் துணையா இருக்கும்..."

"அடுத்து எப்ப போகணும்...?"

"இன்னும் நாலைஞ்சு நாள்ல..."

"சொல்லு, வரேன்..."

"ரொம்ப நன்றிக்...!"

"ஏன் நிறுத்திட்ட...? அக்கான்னு கூப்பிட வந்ததைக் கூப்பிட்டுடு."

"நிஜமாவா...? நிஜமாவா சொல்றீங்க...!?"

"ம்... பிள்ளத்தாய்ச்சிப் பொண்ணுங்க ஆசைப்பட்டதை செய்துடணும்னு சொல்வாங்க. அப்படிக் கூப்பிடுறது உன் ஆசைன்னா கூப்பிட்டுடு.."

அவள் ஆச்சரியமாய், சந்தோஷமாய், புரிந்துகொள்ள முடியாதவளாய் பார்த்துக்கொண்டு நிற்க- ராஜி உள்ளே போனாள்...

அதன்பின் ராஜி அவளிடம் நடந்துகொண்ட விதத்தில் வித்தியாசம் தெரிந்தது. ஒரு வித பற்றும், பிடிப்பும் ஏற்பட்டிருந்தது. தாயின் அரவணைப்பு காணப்பட்டது. உட்கார வைத்து



சாப்பாடு போட்டதில், கூட டாக்டர் வீட்டிற்குச் சென்று வந்ததில், ராத்திரி அவளுக்கென்று தனியாகப் பசும்பால் வாங்கிக் காய்ச்சிக் கொடுத்ததில், ஒரு நல்ல நாளாகப் பார்த்து கைநிறைய கண்ணாடி வளையல்கள் வாங்கி அடுக்கி, ஜடை தைத்து அந்தப் பகுதியில் வசிக்கும் மற்ற குடித்தனக்காரப் பெண்களைக் கூப்பிட்டு வெற்றிலைப் பாக்கு கொடுத்து அனுப்பியதில்- தாங்க இயலாதவளாக கிரிஜா அவளைக் கட்டிக்கொண்டு கண்ணீர் வடித்தாள். வார்த்தை வராமல் தடுமாறினவளாகச் சொன்னாள்.

"அக்கா... அக்கா... நான்... நீங்க... எனக்கு... என்ன சொல்றதுன்னு புரியலைக்கா..."

"ஒண்ணும் சொல்ல வேணாம். பாலைக் குடிச்சிட்டு போய்ப் படு. ரொம்பத் தள்ளாமையா தெரியுது பாரு..."

"ஆமாக்கா... வர வர ரொம்ப முடியாம போயிடுது..."

"மாசமாகலை?... இன்னும் பதினைந்து, இருபது நாள்தான்... டாக்டர் சொல்லலை...?"

"அக்கா... எனக்கென்னவோ பயமா இருக்குக்கா... நீங்க ஆஸ்பத்திரியில் என் கூடவே இருப்பீங்களா?"

"இருக்காம எங்க போவேன்...?"

சொன்ன மாதிரி அவளுக்கு வலி எடுத்ததும் நடுராத்திரியில் ராஜாராமன் ஓடிப் போய் 'டாக்ஸி' கொண்டு வர- இவள் கூடப் போனாள். பிரசவ அறையின் வாசலில் நின்று பிரார்த்தித்தாள். அவளுக்கு நல்லபடி குழந்தை பிறக்க வேண்டும் என்று முருகனை வேண்டி, கந்தசஷ்டி கவசம் சொன்னாள்.

பையனாகப் பிறந்தால் முருகன் பெயரும், பெண் பிறந்தால் மனைவியரில் ஒருவள் பெயரும் வைப்பதாக வேண்டிக்கொண்டபோதே- ஆண் குழந்தை பிறந்திருப்பதாக நர்ஸ் சொன்னாள்.

மூணு கிலோவுக்கு மேல் குழந்தை. அவளைப் போலவே நல்ல நிறம், கண்களும், மூக்கும் தீர்க்கம். வீட்டுக்கு வந்ததும் தொட்டில் வாங்கி, மாடி அறையில் போட்டு- அவளையும், குழந்தையையும்

மாடி அறையிலேயே கொண்டு விட்டாள். பெயர் வைக்கும் நாளன்று எல்லாரையும் கூப்பிட்டு, சிறப்பாகச் செய்து சிவகுமார் என்று பெயரிடச் செய்தாள்.

குழந்தை வீட்டிற்கு வந்தது முதல் இவளுக்கு நேரமில்லாது போயிற்று. மனதில் வெந்து கொண்டிருந்த உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்து கொண்டே வந்து, அடங்கத் தொடங்கியது.

குழந்தை காலையில் எப்போது கண் விழிக்கும்? என்று காத்திருக்கலானாள். முதல் குரல் கேட்ட உடனே இவள் கீழ்ப் படியில் நின்று குரல் கொடுப்பாள்.

"குழந்தையைக் கொண்டு வந்து கீழ விட்டுடு..."

அதன்பின் குழந்தைக்குத் தேவையான அத்தனையையும் செய்வது இவள்தான். குளிப்பாட்டுவது, பால் மாவு கரைத்துக் கொடுப்பது, குழந்தை நனைத்துக்கொள்ளும் துணியை மாற்றுவது, மடியில் போட்டுத் தூங்க வைப்பது...

சில நாட்கள் குழந்தை இவளிடமே தூங்கிப்போவதும் உண்டு.

"தூங்கிட்டானில்ல, ராத்திரி எழுந்திரிச்சு அழுதால் நான் பால் கலந்து தர்றேன். நீ கவலைப்படாம மேல போய்ப் படு..."

"ஏங்க்கா... காலையில இருந்து நீங்களே செய்யறீங்க... ராத்திரியாச்சும் நான் பார்த்துக்கறேன். நீங்க கொஞ்சம் ஓய்வு எடுத்துத் தூங்குங்களேன்..."

"வேணாம்... குழந்தையோடு இருக்கிறது மனசுக்கு நிம்மதியா இருக்கு, நானே கவனிச்சுக்கறேன். நீதான் காலையில எழுந்து ஆபீசுக்குப் போகணும். அதனால போய்த் தூங்கு, நான் பகல்ல கூட கொஞ்சம் கண்ணயற முடியும். உன்னால முடியாது."

அவளை அனுப்பிவிட்டு, அத்தனை நாளும் காலியாகக் கிடந்த பக்கத்துக் கட்டிலில் ரப்பர் விரிப்பை விரித்து– பழைய புடவையை மெத்தையாக்கி– குழந்தையைப் படுக்க வைத்து, பக்கத்தில் தானும் படுத்து– மிக மிக மென்மையாய் அந்தப் பிஞ்சு உடலை அணைத்துக்கொண்டபோது,



இவளையும் மீறி இவளுக்குள் இருந்து மிக மெலிதாய் ஒரு விம்மல் தெரித்து விழுந்தது... காரணம் புரியாமல் அழுகை வர கன்னங்கள் நனைந்தன.

## 8

அன்று ஞாயிற்றுக்கிழமை. மாலை மூன்று மணி அளவில் தயங்கித் தயங்கி வந்து இவளது அறை வாசலில் நின்றாள் கிரிஜா. குழந்தையைத் தோளில் போட்டுத் தட்டிக்கொண்டிருந்த இவள், திரும்பிப் பார்த்துக் கேட்டாள்.

"என்ன...?"

"ஒண்ணுமில்லக்கா... அவர் சினிமாவுக்குப் போகலாம்னு கூப்பிடறார்..."

"போயிட்டு வாயேன்..."


"நீங்களும் வாங்களேன்க்கா. எங்கயும் போகாமல் இப்படி வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கறீங்களே?"

இவள் வெடுக்கென்று திரும்பி, சுரீரென்று அவளைப் பார்த்தாள்.

"நான் எங்கேயும் போகாமல் வீட்ல அடைஞ்சு கிடக்கிறது மட்டும்தான் உனக்குத் தெரியுதா...? எதுவுமே இல்லாமல் சந்நியாசி வாழ்க்கை வாழுறது தெரியல...? அவர்ர உனக்கு ஒப்படைச்சு, உள்ளுக்குள் வெந்து வாடுறது தெரியலை...? கிட்டத்தட்ட ஏழெட்டு மாசத்துக்கு மேல தன்னந்தனியா படுத்து ராத்திரி நேரங்கள்ல மனசு கொந்தளிக்கிறதை அடக்க கந்தசஷ்டி கவசம் சொல்றது தெரியலை. ஒரு குழந்தை... சின்னக் குழந்தையின் வரவால் கொஞ்சம் தணிஞ்சு, எல்லாத்தையும் மறந்து புதுசா ஒரு வாழ்க்கை வாழ்ந்துக்கிட்டு வர்றது தெரியலை...?"

இவள் தன்னை மிகப் பிரயத்தனப்பட்டு அடக்கிக்கொண்டு, குரலை இயல்பாக்கியவாறு சொன்னாள்.

"நான் எப்போ எங்கே உங்கக்கூட வந்திருக்கேன்...? வீட்டுல





இருந்து குழந்தையைப் பார்த்துக்கறேன். நீ போயிட்டு வா."

அவள் மீண்டும் தயங்கித் தயங்கி சொன்னாள்.

"நான்... நான் குழந்தையைப் பார்த்துக்கறேன். நீங்க போயிட்டு வாங்களேன்க்கா."

சடாரென்று திரும்பி கண்கள் பளபளக்கப் பார்த்தாள் இவள். உதடுகள் துடித்தன. குரல் கரகரத்தது.

"உன்னைக் கூப்பிட்டால் நீ கிளம்பறதை விட்டுட்டு, இங்க யாருக்காகவும் பரிதாபப்பட வேணாம். அப்படிப்பட்ட பரிதாபம் எனக்குத் தேவையில்லை."

"இல்லக்கா... வந்து ... நீங்க..."

"மேல எதுவும் பேசிட்டிருக்க வேணாம்." கிளம்பலாம். அநாவசியமா என்னைக் கோபமோ, வருத்தமோ பட வைக்க வேணாம். நான் இப்பத்தான்– இந்தக் குழந்தையால்தான் என் கஷ்டத்தையெல்லாம் மறந்துட்டு வரேன். திரும்ப எதையும் ஞாபகப்படுத்த வேணாம்.".

அவள் அதற்குப் பின்பும் சிறிது நின்று, பின்னர் உற்சாகம் இழந்த குரலில் சொன்னாள்.

"சரிக்கா, நான் வரேன்..." என்று நகர்ந்து போனாள். 'பளிச்'சென்ற புடவையும், தலை நிறைய மல்லிகைப் பூவுமாக வெகு நாட்களுக்குப் பின்னர் சிறிது சிரிப்பும், சந்தோஷமுமாக– அவன் பின்னால் ஸ்கூட்டரில் அமர்ந்து போவதை வெறுமையாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள் இவள்.

அவர்கள் வர ராத்திரி மணி ஒன்பதரை, பத்தாகும் என்பதால்– இவள் குழந்தையை வைத்துக்கொண்டு வெறும் சாதம் மட்டும் வடித்தாள். காலையில் செய்த சாம்பாரும், ரசமும் மீதமிருக்க– தேவையானால் அப்பளம் சுட்டுக்கொள்ளட்டும் என்று குழந்தையைக் கூடத்தின் நடுவில் 'ரப்பர் ஷீட்' விரித்துப் படுக்கவைத்து– விளையாட்டுக் காட்டிக்கொண்டே தலை வாரியபோது– வாசலில் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது. சினிமாவிற்குப் போனவர்கள் அத்தனை சீக்கிரம் எப்படி வர முடியும் என்ற எண்ணத்தில் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

அவர்கள்தான்!

ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு, திரும்பிக் கூடப் பார்க்காமல் மிக அலட்சியமாக அவன் படியேறி மாடிக்குப் போக– அவள் அழுது சிவந்த முகத்தோடு உள்ளே வந்தாள்.

வந்தவள் இவளை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் ஒரு மூலையில் உட்கார்ந்து, முழங்காலில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விசும்பத் தொடங்கினாள்.

இவள் அருகில் போய் தோளில் கை வைத்துக் கேட்டாள்.

"என்ன ஆச்சு, சினிமாவுக்குப் போகலை...?"

அவள் 'இல்லை' என்று தலையாட்டினாள்.

"சினிமாவுக்குப் போகப் போறதாதானே சொன்ன...?"

"அவரு அப்படிச் சொல்லித்தான் கூட்டிட்டுப் போனாரு..."

"பின்ன எங்க போனீங்க...?"

"பீச்சுக்கு... ஏதோ பேசணும்னு அங்கே அழைச்சிட்டுப் போனாரு..."

"அப்ப ஏன் அழுதுக்கிட்டு வரே... ஏதாவது மனஸ்தாபமா...?"

"அவரு என்ன பேசினாருன்றதைக் கேட்டீங்கன்னா உங்களுக்குப் புரியும்..."

"சொல்றது..."

"பீச்சுக்குக் கூட்டிட்டுப் போய் ஒரு லெட்டரை எடுத்துக் கொடுத்துப் படிக்கச் சொன்னாரு..."

"ம்..."

"அதுல என்ன எழுதி இருந்திச்சுன்னு நினைக்கறீங்க...?"

"சொன்னாத்தானே தெரியும்...?"

"யாரோ ரேணுகான்ற பொண்ணு உருகி உருகி எழுதி இருக்கா. இவரு இல்லாம அவளால் இருக்க முடியலையாம். இவரைப் பார்க்காம தவிச்சுப் போயிட்டாளாம். உடனே வந்து கூட்டிட்டுப் போகச் சொல்லி..."



"நீ எழுதின அதே மாதிரி அவளும் எழுதி இருக்காளாக்கும்...?"

இவள் குரலில் வெளிப்பட்டது கிண்டலா, கேலியா, வருத்தமா, கோபமா என்பது புரியாமல்– அவள் அடி வாங்கின மாதிரி தலையை உயர்த்திப் பார்த்தாள்.

"அ...க்...கா...!"

"என்ன பார்க்கறே...? இப்படி நீ என்னை அக்கான்னு கூப்பிடற மாதிரி– நாளைக்கு உன்னை அக்கான்னு கூப்பிட ஒருத்தி வரப் போறாளாக்கும்...?"

"ஆ ஆமாங்கா... அவளை இவரு அழைச்சிக்கிட்டு வரப் போறாராம். அதுக்காக நாளைக்கே கிளம்பிப் போகப் போறாராம்..."

"அப்படியா...? இந்த தடவை எந்த ஊரோ... திரும்ப கோயம்புத்தூரா...?"

"இல்...இல்ல...மதுரைன்னு சொன்னாரு."

"ஓஹோ...! இப்ப இந்தப் பக்கம் திரும்பிட்டாரு போல இருக்கு... ஆமா, நீ என்ன சொன்ன...?"

"இத்தினி நேரமும் சண்டை போட்டேன். ஒருத்தியாச்சு, ரெண்டு பேராச்சு. இப்ப மூணாவதா இன்னொருத்தியான்னு கேட்டதுக்கு..."

"போறலைன்னு பதில் வந்திருக்குமே...?"

"ஆ...மாங்கா..." என்று அவள் மீண்டும் அழத் தொடங்க – இவள் சிறிது நேரம் அழட்டும் என்று பேசாமல் இருந்து– பின்னர் மெதுவாகக் கேட்டாள்.

"அதுக்கு நீ என்ன சொன்னே...?"

"அப்படி ஒருத்தியைக் கூட்டிட்டு வர்றதானால், நான் வீட்ல இருக்கமாட்டேன். வீட்டைவிட்டுப் போயிடறேன்னேன்..."

"தாராளமா போய்க்கலாம். அவளையும் அனுசரிச்சு இருக்கிறதானால் எல்லாரும் ஒரே வீட்ல சந்தோஷமா இருக்கலாம்னு சொல்லி இருப்பாரே...?"

"அக்கா..."

"இப்ப புரியுதா... நான் எவ்வளவு வெந்து போய் இருப்பேன்னு...? உள்ளுக்குள்ளயே எரிஞ்சு சாம்பலா ஆகி இருப்பேன்னு...?"

"......................"

"இப்ப நீ எரிய ஆரம்பிச்சிருக்க... வேகத் தொடங்கியிருக்க. சீ! இவனெல்லாம் ஒரு மனுஷன்... ஒண்ணு, ரெண்டு, மூணாவது மட்டும் போதப் போகுதா என்ன? தான் ஒரு ஆம்பிளைங்கிற திமிர்ல இப்படி நடக்கச் சொல்லுது. எது செய்தாலும் நாம கோர்ட்டு, கேசுன்னு போகமாட்டோம்ன்ற தைரியம்தான் அவனை இந்த மாதிரியெல்லாம் தேடச் சொல்லுது..."

"இல்லக்கா... நான் உங்களை மாதிரி பேசாமல் இருக்கப் போறதில்லை. எல்லாத்துக்கும் அடங்கிப் போகப் போறதில்லை. நாளைக்கே ஒரு வீடு பார்க்கப் போறேன். குழந்தையோட அங்க போயிடப் போறேன். அதுக்கப்புறம் ஒரு வக்கீலைப் பார்த்து வழக்கு போடப் போறேன். இவருகிட்டே இருந்து விவாகரத்து வாங்கிட்டு, இவரை மாதிரி இல்லாம என் குழந்தையை ஒழுங்கா வளர்க்கற வழியைப் பார்க்கப் போறேன்.."

அழுகையும், ஆத்திரமும், கோபமுமாக அவள் பேசியதைக் கேட்டு ஒரு விநாடி மவுனமாய் இருந்த இவள் பின் மெதுவாகக் கேட்டாள்.

"நீ மட்டும்தான் போகப் போறியா... இல்ல, நானும் கூட வரலாமா...?"

"அக்...கா..."

"எனக்கு உன்னை மாதிரி தைரியம் இல்ல. சம்பாதிக்கிற திறமை இல்ல. பி.ஏ. படிச்சிருக்கேனே தவிர நாலெழுத்து சேர்ந்த மாதிரி எழுதவோ... பேசவோ தெரியாது. வீட்டைவிட்டு வெளிய போய் யார்கிட்டேயும் பழகத் தெரியாது. ஆனா, உன் குழந்தையை நல்லா பார்த்துக்குவேன். வீட்டை கவனிச்சுக்குவேன். டிபன், காப்பி, சாப்பாடு எல்லாம் செய்து போடு...."

அவள் சடாரென்று எழுந்து போய்– அதற்கு மேல் பேச முடியாதவாறு இவளது வாயை இறுகப் பொத்தினாள்.

"பேசாதிங்கக்கா... இதுக்கு மேல இப்படியெல்லாம் பேசாதிங்க.



குழந்தையை நான் பெத்தேனே தவிர, வளர்த்ததெல்லாம் நீங்க. அவனுக்கு அம்மா நீங்க. எனக்கு எல்லாமே நீங்கதான். அன்னிக்கே நான் சொல்லலை. எனக்கு யாரும் இல்லைக்கா... எல்லாம் நீங்கதான்னு! அதையே திருப்பிச் சொல்றேன்.

நீங்கதான் எனக்கு எல்லாம். அந்த மாதிரி அந்த வீட்டுக்கு எஜமானியா– என் குழந்தைக்குத் தாயா– எனக்கு ஏனக்கு வழிகாட்டியா, துணையா வாங்கக்கா. இவரு இங்க இன்னும் எத்தனை பேரை வேணும்னாலும் கூட்டிட்டு வந்து வச்சிக்கிடட்டும். இந்த மாதிரி ஒரு மோசக்காரப் பேர்வழியை, போறலைன்னு அலையற மிருகத்தை விட்டு நாம் விலகிப் போய் தனியா– நிம்மதியா வழலாம். என்ன சரியா...? சரியாக்கா..."

"சரி... சரி...! முடிவு செய்தாச்சு இல்ல. அதுக்கு மேலயும் இப்படி மூலையில உட்கார்ந்து அழுதிட்டிருக்காமல் எழுந்து முகத்தைக் கழுவிட்டு வா. தட்டு எடுத்து வைக்கிறேன். சாப்பிட்டுப் படுக்கலாம். காலையில எழுந்து முதல் வேலையா வீடு தேடற படலத்தை ஆரம்பிக்கலாம். ம்... எழுந்திரி! குழந்தைக்குப் பசி எடுத்து அழத் தொடங்கறதுக்குள் பாலைக் கரைச்சு வச்சிட்டு சாப்பிட உட்காரலாம். வா..."

இவள் உள்ளே போய் தட்டுகளை எடுத்துப் போட– அவள் எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு வந்து உட்கார்ந்தபோது– மீண்டும் குமுறிக் குமுறி அழுகை வர– அதை அடக்குகிற வழி தெரியாமல்– இவள் மடியிலேயே முகம் புதைத்து கண்ணீர் வடிக்க–

வெந்து வெந்து தன்னைப் போலவே அவளும் ஒரு நாள் தணிந்து போவாள் என்பதால்... மெல்ல அவள் முதுகை ஆறுதலாய்– ஆதரவாய் வருடத் தொடங்கினாள் இவள்.

**(முடிந்தது)**